பக்கங்கள்: 13

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 08 வள்ளுவர் ஆண்டு 2055 சித்திரை 12 வியாழக்கிழமை 25.04.2024 கதிர் 169

### வவுனியா பல்கலைக்கழகத்தில் பரபரப்பு

# உள்ளாடையுடன் பெண்கள் விடுதிக்குள் நுழைந்த நபரால் மாணவிகள் அச்சம்

### பாதுகாப்பு உத்தரவாதம் கேட்டு வகுப்பு புறக்கணிப்பு

வவுனியா பல்கலைக்கழக பெண்கள் விடுதியில் இருந்து தாம் முற்றாக வெளியேறியுள்ளனர் என்று மாணவிகள் கூறுகின்றனர். விடுதிக்குள் நள்ளிரவில் உள்ளாடையுடன் மர்ம நபர் ஒருவர் நுழைந்ததால் ஏற்பட்ட அச்சமே மாணவிகளின் வெளியேற்றத்துக்குக் காரணம். விடுதிகளில் தமது பாதுகாப்பை உறுதிப்படுத்தும்படி வலியுறுத்தி மாணவிகள் வகுப்புகளைப் புறக்கணித்துப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. நுழைந்த மர்ம நபர் குறித்து பூவரசங்குளம் பொலிஸில் முறைப்பாடும் செய்யப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவத்தால் ஏற்பட்ட அதிர்ச்சி மாணவி ஒருவரின் தாயாரது இறப்புக்குக் காரணமாக அமைந்ததாகவும் மாணவிகள் தரப்பில் குற்றஞ்சாட்டப்படுகின்றது. ☞2



## இது ரகசியம் அல்ல!

தமிழ் அரசுக் கட்சியின் வழக்கு இன்னும் ஒரு மாதத்திற்குத் தள்ளிப் போய் இருக்கின்றது. வழக்கில் இப்போது 7 எதிராளிகள் சார்பில் மூன்று விதமான ஆட்சேபனைகள் கொடுக்கப்பட்டுள்ளன. வழக்காளி கேட்கும் நிவாரணங்களை முழுமையாக வழங்கி இந்த வழக்கை முடித்து வைக்க விரும்புகின்றோம் என்கிறது ஒரு தரப்பு. தெரிவு செய்யப்பட்ட தலைவர் சிறீதரன் மற்றும் தெரிவு செய்யப்பட்ட செயலாளர் குகதாசன் ஆகியோர் சார்பில் இந்த நிலைப்பாடு வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

வழக்காளி கூறியிருப்பதன் படி யாப்புக்கு முரணாக பொதுக் குழுக் கூட்டப்படவில்லை, கட்சித்தலைவரின் விருப்பப்படி 20 பேர் கொண்டு வரப்பட்டமை மட்டுமே அதிலிருந்த ஒரே தவறு, அதுவும்கூட தலைவர் தேர்தல் வெற்றியில் பாதிப்பை ஏற்படுத்தவில்லை என்பது மற்றொரு தரப்பின் ஆட்சேபனை. நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன், நிர்வாகச் செயலாளர் குலநாயகம், பதில் பொதுச் செயலாளர் சத்தியலிங்கம் ஆகியோர் சார்பில் இந்த நிலைப்பாடு.

முன்னாள் தலைவர் ☞2

## சு.க. பதில் தலைவராக விஜயதாசவுக்கும் தடை

சுதந்திரக் கட்சியின் பதில் தலைவராக அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷவை நியமிப்பதற்கு கொழும்பு மாவட்ட நீதிமன்றம் தடை உத்தரவு பிறப்பித்துள்ளது. மேலும், கட்சியின் பொதுச் செயலாளராக துஷ்மந்த மித்ரபால செயற்படுவதைத் தடுத்து மற்றுமொரு தடை உத்தரவும் பிறப்பிக்கப்பட்டுள்ளது.

மேலும், தற்காலிக தலைமைச் செயலர் எடுத்த முடிவுகளை அமுல்படுத்தவும் நீதிமன்றம் மற்றொரு தடை உத்தரவு பிறப்பித்தது.

இதேவேளை, அமைச்சர்களான மஹிந்த அமரவீர, லசந்த அழகிய வண்ண மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் துமிந்த திஸாநாயக்க ஆகியோரை சுதந்திரக் கட்சியின் பதவிகளிலிருந்து நீக்கும் தீர்மானத்துக்கு எதிரான தடையை எதிர்வரும் 24ஆம் திகதி வரை நீடிக்குமாறு கொழும்பு மாவட்ட நீதிபதி சந்துன் விதான உத்தரவிட்டுள்ளார்.

லங்கா சுதந்திரக் கட்சியில் தாம் வகித்து வந்த பதவிகளில் இருந்து ☞2

## ரஷ்ய தரைப்படை தளபதி இலங்கைக்கு வருகை

ரஷ்ய ஆயுதப் படையின் தரைப் படையணியின் பிரதான படைத் தளபதி மேஜர் ஜெனரல் ஸ்விரிடோவ் விளாடிமிர் (Sviridov Vladimir) உள்ளிட்ட குழுவினர் உத்தியோகபூர்வ பயணமாக இலங்கைக்கு வந்துள்ளனர்.

ரஷ்ய ஆயுதப் படையின் தரைப் படையின் பிரதான படைத் தளபதியான மேஜர் ஜெனரல் விளாடிமிர் இந்தப் பயணத்தில் பாதுகாப்புப் பதவி நிலை தலைமை அதிகாரி ஜெனரல் சவேந்திர சில்வாவை சந்தித்தார்.

ரஷ்யாவிற்கும் இலங்கைக்கும் இடையிலான நீடித்த நட்புறவை இதன்போது வலியுறுத்தியதுடன், குறித்த நட்புறவு எதிர்காலத்தின் நீண்ட கால நட்புறவு என மேஜர் ஜெனரல் விளாடிமிர் கூறியுள்ளார்.

அவருடனான சந்திப்பினை வரவேற்பதாக பாதுகாப்புப் பதவி நிலை தலைமை அதிகாரி ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார். இதன்போது, இலங்கைக்கும் ரஷ்யாவிற்கும் இடையிலான ஆழமான மற்றும் வலுவான இருதரப்பு உறவுகள் குறித்தும் அவர் வலியுறுத்தினார்

## வன்புணர்வு படுகொலை சந்தேகநபர் இந்தியாவிற்கு தப்பிச் சென்றுவிட்டாரா?

### சார்ள்ஸ் நிர்மலநாதன் எம்.பி. சபையில் கேள்வி

தலைமன்னாரில் 8 வயதுச் சிறுமியை வன்புணர்ந்து படுகொலை செய்தவர் என்று சந்தேகிக்கப்படும் நபர் இந்தியாவிற்குத் தப்பிச் சென்றுவிட்டாரா என்று இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சார்ள்ஸ் நிர்மலநாதன் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற ☞2

## மைத்திரிக்கு மற்றொரு தடை

சிறீ லங்கா சுதந்திரக் கட்சியின் தலைவராக முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன செயற்படுவதற்கு கொழும்பு மாவட்ட நீதிமன்றம் நேற்று மற்றுமொரு இடைக்காலத் தடையுத்தரவை பிறப்பித்துள்ளது.

சுதந்திரக் கட்சியின் செயற்குழு உறுப்பினர் மொண்டேகு சரத்சந்திர சமர்ப்பித்த முறைப்பாடு தொடர்பில் கொழும்பு மாவட்ட நீதிபதி சந்துன் விதான இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளார். குறித்த விசாரணை முடியும் வரை இந்த இடைக்காலத் தடை அமுலில் இருக்கும் என உத்தரவில் தெரிவிக் ☞8

## ஈரானிய தொழில்நுட்ப ஒத்துழைப்பு குறித்து ஜனாதிபதி ரணில் சிலாகிப்பு

ஈரானிய தொழில்நுட்ப ஒத்துழைப்பு கிடைக்காமல் போயிருந்தால் உமா ஓயாவிலிருந்து கிரிந்தி ஓயாவிற்கு நீரை எடுத்துச் செல்வதற்கு சந்தர்ப்பம் கிடைத்திருக்காது என்று ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, தெரிவித்தார்.

உமா ஓயா பல்நோக்கு அபிவிருத்தித் திட்டத்தினை அங்குராட்பணம் செய்து வைக்கும் நிகழ்வில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்,

இந்தத் திட்டம் எனது பதவிக் காலத்திற்கு முன்பிருந்த தலைவர்களால் தொடங்கப்பட்டது என்பதைக் கூற வேண்டும். அத்துடன் உலர் வலய பிரதேசத்திற்கு நீர் வழங்கும் இத்திட்டத்தில் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ விசேட அக்கறை காட்டினார். முன்னாள் சபாநாயகர் சமல் ராஜபக்ஷ இந்த திட்டத்தை நிறைவேற்றும் பொறுப்பை ஏற்றுக் கொண்டார்.

உமா ஓயா பல்நோக்கு ☞2

## 5 ஒப்பந்தங்கள் கைச்சாத்து

ஈரானுக்கும் இலங்கைக்கும் இடையிலான இருதரப்பு உறவுகளை வலுப்படுத்தும் நோக்கத்தில் 5 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்பட்டுள்ளன.

இந்தப் புரிந்துணர்வு ஒப்பந்தங்களின் ஊடாக திரைப்படத் துறை, ஊடகம், சுற்றுலா, கூட்டுறவு, நூலகங்கள், கலாசாரம், அறிவியல், தொழில்நுட்பம் மற்றும் விளையாட்டு ஆகிய துறைகளில் இரு நாடுகளுக்கும் இடையிலான ஒத்துழைப்பு மேம்படுத்தப்படும் என ஜனாதிபதி ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

முன்னாக, ஈரான் இஸ்லாமிய குடியரசின் ஜனாதிபதி கலாநிதி இப்ராஹிம் ரைசி உள்ளிட்ட குழுவினர் கொழும்பிலுள்ள ஜனாதிபதி அலுவலகத்தை நேற்று மாலை வந்தடைந்தனர்.

ஈரான் ஜனாதிபதி உள்ளிட்ட குழுவினருக்கு ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவினால் அமோக வரவேற்பளிக்கப்பட்டது. அதன்பின், ஈரான் ஜனாதிபதிக்கு முப்படைகளின் மரியாதை செலுத்தப்பட்டது. வேட்டுக்கள் தீர்க்கப்பட்டன.

அதன்பின்னர் ஈரான் ஜனாதிபதி கலாநிதி இப்ராஹிம் ரைசிக்கும் ஜனாதிபதி ரணில் ☞2

## உமா ஓயா திட்டத்தை நாட்டுக்கு அர்ப்பணித்தார் ஈரானிய அதிபர்

மகாவலி திட்டத்திற்கு அடுத்தபடியாக இலங்கையின் பெரும் நீர்ப்பாசனத் திட்டமாக வரலாற்றில் இடம்பிடித்துள்ள 'உமா திய ஜனனி' பல்நோக்கு அபிவிருத்தித் திட்டம் நேற்று இலங்கை-ஈரான் ஜனாதிபதிகளினால் மக்கள் பாவனைக்காகக் கையளிக்கப்பட்டது.

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் அழைப்பின் பேரில் இந்த நிகழ்விற்கு வருகை தந்திருந்த ஈரான் ஜனாதிபதி இப்ராஹிம் ரைசிக்கு ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவினால் அமோக வரவேற்பளிக்கப்பட்டது.

இருநாட்டு தலைவர்களும் பெயர்ப் பலகையை திரைநீக்கம் செய்து 'உமாதியாஜனனி' பல்நோக்கு அபிவிருத்தித் திட்டத்தை மக்களிடம் கையளித்தனர், டிஜிட்டல் தொழில்நுட்ப முறையின் ஊடாக மின் உற்பத்தி இயந்திரங்களை இயக்கி திட்டப் பணிகளை சம்பிரதாயபூர்வமாகத் தொடக்கியும் வைத்தனர்.

இந்நிகழ்வில் உரையாற்றிய ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, ஈரானின் ஆதரவின்றி இலங்கையால் உமா ஓயாவிலிருந்து கிரிந்தி ஓயாவிற்கு நீரை கொண்டு சென்றிருக்க முடியாது என்று தெரிவித்தார். அதற்காக ஈரான் ஜனாதிபதி தலைமையிலான அரசுக்கு நன்றி தெரிவிக்கிறார் என்றும், ஈரானுடன் நெருக்கமான உறவுகளை ஏற்படுத்திக் கொண்டு முன்னோக்கிச் செல்வதே தனது நோக்கமாகும் எனவும் தெரிவித்தார்.

உலகின் தென்துருவ நாடுகள் தமது தனித்துவத்தையும் சுதந்திரத்தையும் நிலைநாட்ட விரும்புவதை நினைவு கூர்ந்த ஜனாதிபதி, அதற்காக தென்துருவ நாடுகள் ஒன்றிணைந்து செயற்பட வேண்டியதன் அவசியத்தையும் வலியுறுத்தினார்.

அதனையடுத்து ☞2

## உக்ரைன் போரில் இலங்கையரா? விசாரணை நடக்கிறது - நீதி அமைச்சர்

உக்ரைன் - ரஷ்யா போரில் இலங்கையர்கள் ஈடுபடுத்தப்படுகின்றனர் என்று கூறப்படுவது தொடர்பில் ஆளும் தரப்பு விசாரணைகளை முன்னெடுத்துள்ளதாக நீதி அமைச்சர் விஜயதாச ராஜபக்ச தெரிவித்தார்.

நாடாளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர நேற்று எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற அமர்வின் விசேட கூற்றை முன்வைத்து உரையாற்றிய தயாசிறி தெரிவித்ததாவது:

இலங்கை இராணுவ சேவையில் இருந்து ஓய்வுப் பெற்ற இராணுவத்தினர் உக்ரைன் மற்றும் ரஷ்யா ஆகிய நாடுகளில் இராணுவ முகாம் உதவியாளர் சேவைக்கு அழைத்து பின்னர் பலவந்தமான முறையில் போர்க் களத்துக்கு அனுப்பி ☞2

## நீதிபதி இளஞ்செழியனின் காவலர் கொல்லப்பட்ட வழக்கு விசாரணை

### யாழ். மேல் நீதிமன்றில் நேற்று தொடங்கியது

நீதிபதி மாணிக்கவாசகர் இளஞ்செழியனின் மெய்ப் பாதுகாவலர் சுட்டுக்கொல்லப்பட்டமை தொடர்பான வழக்கு நேற்று யாழ்ப்பாணம் மேல்நீதிமன்றில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. நீதிபதி இளஞ்செழியனின் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

2017ஆம் ஆண்டு ஜூலை 22 நல்லூர் பின் வீதியில் நல்லை ஆதீனச் சந்தியில் நடந்த துப்பாக்கிச் சூட்டில் நீதிபதி இளஞ்செழியனின் மெய்ப் பாதுகாவலர் உயிரிழந்தார். இந்தக் கொலை தொடர்பாக சந்தேகநபர் ஒருவர் கைது செய்யப்பட்டார். நிறைபோதையில் ☞8

## இனி இது .....

மாவை சேனாதிராசா சார்பிலோ கட்சியின் யாப்புக்கு முரணாக எதுவும் நடக்கவில்லை. எல்லாமே யாப்புப்படிதான் நடந்திருக்கின்றது. அதற்கான யாப்பு பிரதியையும் வழங்குகின்றோம் என்பது மூன்றாவது நிலைப்பாடு. இனி இந்த வழக்கில் இடையீட்டு மனுதாரராக நுழைந்த கொழும்பு மாவட்டக் கிளையின் உறுப்பினர் தனது ஆட்சேபனையை வழங்க வேண்டியிருக்கின்றது. அதுவரும் போது இந்த நிலைப் பாடுகளில் மேலும் விரிவாக்கங்கள்கூட வரலாம்.

நேற்றைய வழக்கு விசாரணை சுமார் 3 மணி நேரம் நடந்து. அதன் பின்னர் வழக்கு மே மாதம் 31 மீண்டும் விசாரிக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது. ஆகமொத்தத்தில் ஜனவரி27 கட்சியின் தலைமையைப் பொறுப்பேற்றிருக்கவேண்டியவர்கள் 4 மாதங்கள் கடந்த பின்னரும் பொறுப்பேற்கப்போவதில்லை. அதுவரையில் கட்சித் தலைவராக மாவை சேனாதிராசாதான் தொடரப் போகின்றார். இந்தவழக்குஇழுபடும் வரைக்கும் அவரே தொடர்வார்.

மொத்தத்தில் இந்த வழக்கினால் வழக்காளியோ எதிராளிகளோ பயனடைகிறார்களோ இல்லையோ மாவையர் நன்கு பயனடைகின்றார். விருப்பு வெறுப்புக்களுக்கு அப்பாற்பட்டு இதுவரையில் தலைவராக இருந்தவரான அவர் தொடர்வதில் தவறில்லைத்தான் என்றாலும், தலைமைப்பதவியைத் திரிசங்கு சொர்க்கத்திற்குள் நிறுத்தி வைத்திருப்பதைப் போன்று கட்சியையும் நிறுத்தி வைக்காமல் தலைவராகப் பொறுப்பெடுத்து ஆற்றவேண்டிய காரியங்களைச் செய்தாலாவது பரவாயில்லை என்பதுதான் நிலமை.

கட்சி எந்த உருப்படியான தலைவரும் இன்றி செயலற்ற நிலையை நோக்கிச் சென்று கொண்டிருக்கின்றது. அதற்கு யாராவது செயற்பட்டால் நல்லது.

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## உள்ளாடையுடன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வவுனியா மாவட்டம் பம்பைமடுவில் அமைந்துள்ளது வவுனியா பல்கலைக்கழக மாணவிகள் விடுதி. அங்கு வெள்ளிக்கிழமை இரவு 12.45 மணியளவில் மர்ம நபர் ஒருவர் உள்ளாடையுடன் நுழைந்ததைத் தான் பார்த்தார் என்று மாணவி ஒருவர் தெரிவிக்கிறார். அந்த நபரைக் கண்டு அச்சமடைந்த மாணவி கூக்குரலிட்டுக்கத்தியுள்ளார். இதனால் அந்த மர்ம நபர் தப்பியோடிவிட்டார் என்று கூறப்படுகின்றது.

நுழைந்த மர்ம நபரைக் கண்டவரெனக் கூறப்படும் முதல் வருட மாணவி அச்சமடைந்த நிலையில் சம்பவம் பற்றி தனது தாயாருக்குத் தொலைபேசியில் தகவல் தெரிவித்தார் என்றும் ஏற்கனவே இருதய நோயினால் பாதிக்கப்பட்டிருந்தவரான தாயார் இந்த அதிர்ச்சியில் நோய்வாய்ப்பட்டு மறுநாள் உயிரிழந்தார் என்றும் மாணவிகள் தரப்பில் கூறப்படுகின்றது.

மர்ம நபரால் ஏற்பட்ட அச்சத்தை அடுத்து மாணவிகள் விடுதியில் இருந்து முற்றாக வெளியேறியுள்ளனர். விடுதியின் பாதுகாப்பை உறதிப்படுத்துமாறு காரீ வகுப்புகளைப் புறக்கணித்துப் போராட்டத்திலும் ஈடுபட்டு வருகின்றனர்

உள்ளாடையுடன் நுழைந்த மர்மநபர் தொடர்பில் பூவரசன்குளம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. விடுதியைச் சுற்றியுள்ள பகுதிகளில் பொருத்தப்பட்டுள்ள மறைகாணிகளின் (சிசிரிவி) உதவியுடன் சம்பந்தப்பட்டவரைக் கண்டுபிடிப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்று பொலிஸார் தெரிவித்தனர்.

(100)

## வன்புணர்வு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உயிர்த்த ஞாயிறு தின குண்டுத் தாக்குதல் தொடர்பான சபை ஒத்திவைப்பு விவாதத்தின் முதல்நாளில் உரையாற்றுகையில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

கடந்த பெப்ரவரி மாதம் 15ஆம் திகதி தலைமன்னாரில் 8 வயது சிறுமி பாலியல் வன்கொடுமை செய்யப்பட்டுகொலைசெய்யப்பட்டார். குச்சவெளிப்பகுதியைசேர்ந்த அப்துல் ரகுமான் என்ற 52 வயதான நபர் முழுமையான சாட்சியங்களோடு கைதுசெய்யப்பட்டார். கைதுசெய்யப் பட்டவர் ஏப்ரல் 3ஆம் திகதி வவுனியா வைத்தியசாலையிலிருந்து தப்பித் துள்ளார்.

பாலியல் வன்கொடுமை, படுகொலை ஆகிய குற்றங்களை செய்த இந்தநபரைஎப்படி பொலிஸார் வவுனியா வைத்தியசாலைக்கு அனுப்பி வைத்தார்கள்? இதில்தான் மர்மம் உள்ளது. இந்நபர் அந்த கிராமத்திலுள்ள தென்னந் தோட்டத் தில்வேலைசெய்துள்ளார். தொழிலை பெற்றுக்கொள்ள வரும்போது தனது பெயர் விஜேந்திரன் என்று அந்த தென்னம்தோட்ட உரிமையாளரிடம் தெரிவித்து அந்த கிராமத்தில் வாழ்ந்துள்ளார்.

அவர் கைது செய்யப்பட்டதன் பின்னர் தான் தெரியும் அவரின் பெயர் அப்துல் ரகுமான் என்பது. இவ்வாறு பெயர் மாறாட்டம் செய்தது தெரிய வந்துள்ளது. சிறுமியை பாலியல் வன்கொடுமை செய்து படுகொலை செய்ய ஒரு நபரை பொலிஸார் எவ்வளவு அலட்சியமாக தப்ப விட்டுள்ளனர். நாளை அவரின் வழக்கு மன்னார் நீதிமன்றத்தில் உள்ளது. இவ்வாறான ஒருவர் வவுனியா சிறையிலிருந்து வவுனியா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டு தப்பிக்க விடப்பட்டுள்ளார். இது தொடர்பில் நீதி அமைச்சரின் பதில் என்ன?

இதேவேளை நேற்று முன்தினம் கூட இரு பெரியவர்களும் ஒரு வயது குறைந்துவரும் இந்தியா வின்ராமேஸ்வரத்துக்குஇலங்கையி லிருந்து சென்றுள்ளனர். இது தொடர்பில் தலைமன்னார் பிரதேச மக்கள் எனக்கு தொலைபேசியில் கூறுகையில், சிறுமியை வன்கொடுமை செய்து கொன்ற கொலையாளிதான் ராமேஸ்வரம் சென்று வேறு பெயரில் தஞ்சமடைந் துள்ளார். என்று கூறினார்கள்.

இந்த அப்துல் ரகுமான் என்ற குற்றவாளி இந்தியாவின் மண்டபம் முகாமில் தஞ்சமடைந்துள்ளாரா என்ற கேள்வியை தலைமன்னார் மக்கள் இந்த அரசிடம் கேட்க விரும்புகின்றார்கள்.

எனவே இவரை கைது செய்ய நீதி அமைச்சு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது என்பதனை கேட்பதுடன் அவரை உடனடியாக கைது செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றார்.

## உக்ரைன் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வைக்கப்படுகிறார்கள்.

அண்மையில் குசந்த குணதிலக என்ற ஓய்வுப்பெற்ற இராணுவ அதிகாரி உட்பட இருவர் பலவந்தமான முறையில் யுத்த தாங்கிக்குள் சேவைக்கு அமர்த்தப்பட்டுள்ளார்கள். இவ்வாறான நிலையில் இரு இலங்கையர்கள் உயிரிழந்துள்ளார். குசந்த குணதிலக என்பவர் காணாமல் போயுள்ளார்.

உக்ரைன் மற்றும் ரஷ்ய இராணுவசேவையில் இலங்கையர்களுக்கு தொழில்வாய்ப்புக்களை பெற்றுக்கொடுப்பதாக குறிப்பிட்டுக் கொண்டு பெரும் மோசடிகள் நடக்கின்றன. ஒரு நபரிடமிருந்து தலா 18 இலட்சம் ரூபா பெற்றுக்கொள்ளப்படுகிறது. சமூக வலைத்தளங்கள் ஊடாகவே தொழில் வாய்ப்புக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விடுதலை புலிகள் அமைப்பை இல்லாதொழித்த எமது இராணுவத்தினர் இன்று ரஷ்யா - உக்ரைன் போர்க்களத்தில் மோதிக் கொள்கிறார்கள். பொருளாதார பாதிப்புக்கு மத்தியில் வெளிநாடுகளுக்கு செல்லும் இலங்கையர்கள் பாரிய நெருக்கடிகளை எதிர்கொள் கிறார்கள். ஆகவே இவ்விவகாரம் தொடர்பில் ஆளும் தரப்பு உரிய நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும் என்றார்.

இதன்போது எழுந்து பதிலளித்த நீதியமைச்சர் விஜயதாஸ ராஜபக்ச நாடாளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர முக்கியமானதொரு விடயத்தை முன்வைத்துள்ளார். இலங்கை இராணுவத்தினர் இலங்கையர்கள் உக்ரைன் மற்றும் ரஸ்யா இராணுவத்தில் தொழில் வாய்ப்புக்களை பெற்றுக் கொள்வதற்காகச்செல்கிறார்கள். இதன் ஊடாக மோசடிகள் இடம்பெறுவதாக குறிப்பிட்டார். இவ்விடயம் குறித்து பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். வெளிநாட்டு வேலைவாய்ப்புக்கள் அமைச்சு மட்டத்திலும் விசாரணைகள் முன்னெடுக்கப்படுகின்றன. இவ்விடயம் தொடர்பில் பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சுடன் கலந்துரையாடி முழுமையான விவரத்தை அறிவிக்கிறேன் என்றார்.

## ஈரானிய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அபிவிருத்தி திட்டத்தை நடைமுறைப்படுத்தும் போது பல்வேறு சவால்களை எதிர்கொள்ள வேண்டியிருந்தது. ஆனால் எமது இரு நாடுகளுக்கும் சவால்களை எதிர்கொள்வதில் நல்ல அனுபவம் உள்ளது. எனவே, இந்த சவால்களையும் நாங்கள் வெற்றிகரமாக எதிர்கொண்டோம்.

மேலும், இந்த உமா ஓயா திட்டம் நமது இரு நாடுகளின் இரண்டு பழைமையான நீர்ப்பாசன மரபுகளின் கலவையாகும். ஈரானில் பெர்சியா மற்றும் இலங்கையில் அனுராதபுரத்தின் நீர்ப்பாசன பாரம்பரியம் இங்கே உள்ளது. ஈரானிய தொழில்நுட்ப ஒத்துழைப்பு கிடைக்காமல் போயிருந்தால் உமா ஓயாவிலிருந்து கிரிந்தி ஓயாவிற்கு நீரைஎடுத்துச்செல்வதற்கு சந்தர்ப்பம் கிடைத்திருக்காது என்பதைக் கூற வேண்டும்.

ஈரானின் தொழில்நுட்ப வல்லமை அனைத்துதுறைகளிலும் பரவியுள்ளது. ஈரான் தனக்கே உரிய தொழில்நுட்ப வளர்ச்சியைப் பேணும் நாடு என்பதையும் கூற வேண்டும். எனவே, இருநாடுகளின் பொதுவான அம்சங்களை நாம் வலுப்படுத்த வேண்டும். நாம் அனைவரும் உலகளாவிய தெற்கு நாடுகளில் அடங்குகிறோம். உலகளாவிய தெற்கு நாடுகள் தங்கள் அடையாளத்தையும் சுதந்திரத்தையும் நிலைநிறுத்திக் கொண்டிருக்கும் நேரத்தில் இத்தகைய திட்டங்கள் மிகவும் முக்கியமானவை.

உமா ஓயா பல்நோக்கு அபிவிருத்தி திட்டத்தின் ஊடாக, ஈரான் எமது நாட்டின் உலர் வலய பிரதேச மக்களுக்கு நீர் வழங்குவதற்கு பங்களித்துள்ளது. இது மக்களுக்கு எதிர்காலம் குறித்த நம்பிக்கையை ஏற்படுத்தியுள்ளது.

உலர்வலயபகுதிக்குநீர்வழங்குவது என்பது அந்தப் பகுதி மக்களுக்கு வாழும் உரிமையை வழங்குவதாகும். கிருவாபத்துவவிற்கு அப்பால், மாகம்பத்துவவில் உள்ள பகுதியில் வறட்சியால் மக்கள் கடும் அவதிக்குள்ளாகி வருகின்றனர். அப்படியானால், இன்று நாம் செய்திருப்பது உடவளையில் கிடைக்கும் பல்நோக்கு முறைமையை கிரிந்திஓயாவுக்குக்கொண்டுவருவது தான்.

அந்தநீர்ப்பாசனமுறைமையுடன் ஹம்பாந்தோட்டை மாவட்டத்தில் புதிய முதலீட்டு வலயத்தை ஆரம்பிக்கவும் திட்டமிட்டுள்ளோம். அதற்காக சீனாவின் சினோபெக் நிறுவனத்திற்கு எரிபொருள் சுத்திகரிப்பு ஆலைக்கு ஏற்கனவே ஒப்புதல் அளித்துள்ளோம். இதன் மூலம் ஹம்பாந்தோட்டை மாவட்டம் புதிய பொருளாதார முன்னேற்றத்தை பெறும்.

இந்தப் பல்நோக்கு அபிவிருத்தித் திட்டத்தின் ஊடாக சிறு மற்றும் பெரும்போகங்களில் 6000 ஹெக்டெயார் நிலப்பரப்பில் விவசாயம் செய்வதற்கு விவசாயிகளுக்கு சந்தர்ப்பம் ஏற்படும். உடவளவ பிரதேசம் இலங்கையில் அதிகளவு நெல்லை உற்பத்தி செய்கிறது. தற்போது ஹம்பாந்தோட்டை பிரதேசத்திலும் அதேசெயற்பாடுகளை முன்னெடுக்க முடியும் என எதிர்பார்க்கின்றோம்.

அதன் மூலம் தென் மாகாணத்திலும் விவசாய நவீனமயமாக்கல் வேலைத்திட்டத்தை ஆரம்பிக்க முடியும். மேலும், இது வலுசக்தித் துறைக்கு பெரும் பங்களிப்பை வழங்கும்.

இந்த திட்டத்தின் ஊடாக 120 மெகாவொர்ட் நீர்மின்சாரம் உற்பத்தி செய்யப்படும். உலகின் தெற்கில் வளர்ச்சியடைந்து வரும் நாடுகள் என்ற வகையில் ஈரானும் இலங்கையும் இணைந்து இத்திட்டத்தை நடைமுறைப் படுத்தியுள்ளன. அதன்படி, ஈரானுக்கும் இலங்கைக்கும் இடையில் நெருங்கிய உறவுகளை ஏற்படுத்திக் கொண்டு முன்னேறுவோம் என்று நான் உறுதியளிக்கிறேன் எனவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

## உமா ஓயா....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கருத்து தெரிவித்த ஈரான் ஜனாதிபதி இப்ராஹிம் ரைசி, இந்த திட்டம் ஈரானுக்கும் இலங்கைக்கும் இடையிலான நட்புறவின் சின்னம் மட்டுமல்ல, ஆசிய வலய நாடுகளுக்கு இடையேயான அதிகபட்ச ஒத்துழைப்பு, ஒருமைப்பாடு, நல்லிணக்கம் மற்றும் ஒற்றுமைக்கான அடையாளமும் ஆகும் என்றும் தெரிவித்தார்.

இலங்கையுடனான சிறந்த ஒத்துழைப்புடன் முன்னோக்கிச் செல்ல தயாரென உறுதியளித்த ஈரான் ஜனாதிபதி, இலங்கையின் பெரும் அபிவிருத்தித் திட்டங்களுக்கு தொழில் நுட்ப மற்றும் பொறியியல் சேவைகளை வழங்குவதன் மூலம் இலங்கையின் முன்னேற்றத்திற்கும் அபிவிருத்திக்கும் உதவத் தயாரெனவும் தெரிவித்தார்.

உமாஓயா பல்நோக்கு அபிவிருத்தித் திட்ட அங்குரார்ப்பண நிகழ்வில் பங்கேற்பதற்காக ஈரான் ஜனாதிபதி இப்றாஹிம் ரைசி மற்றும் அவரது பாரியார் ஜெமீலே சதாத் அலமோல் ஹதா உள்ளிட்ட குழுவினர் நேற்-றுக் காலைமத்தளவிமானநிலையத்தின் ஊடாக நாட்டை வந்தடைந்தனர்.

ஈரான் ஜனாதிபதி தலைமையிலான குழுவினருக்கு பிரதமர் தினேஷ் குணவர்தன மற்றும் அமைச்சர்களால் அமோக வரவேற்பளிக்கப்பட்டது.

2008 ஏப்ரல் மாதத்தில் அப்போதைய ஈரான் ஜனாதிபதி மொஹமட் அஹமதி நெஜாட்டின் இலங்கை வருகைக்குப் பின்னர், ஈரான் ஜனாதிபதியொருவர் இலங்கைக்கு விஜயம் செய்வது இதுவே முதல் தடவை.

தனது வருகையை குறிக்கும் வகையில் ஈரான் ஜனாதிபதி மத்தளை விமான நிலையத்தில் உள்ள விருந்தினர் குறிப்பேட்டிலும் பதிவிட்டார்.

உமா ஓயா பல்நோக்கு அபிவிருத்திதிட்டம் என்பது இலங்கையின் தேசிய முக்கியத்துவம் வாய்ந்த திட்டமாகும். தென்கிழக்கு பகுதியின் உலர் வலயத்தில் நிலவும் நீர்ப் பற்றாக்குறையைப் தனிப்பதற்காக, சுற்றுச் சூழலுக்கும், நீர் மூலங்களுக்கும் பாதிப்பு ஏற்படாதவகையில், உமாஓயாவில் வருடாந்தம் சேரும் 145 கனமீற்றர் நீருக்கு மேலதிகமான நீரை கிரிந்தி ஓயவிற்கு திருப்பிவிடுவதே இத்திட்டத்தின் பிரதான நோக்கமாகும்.

இதன் மூலம் மொனராகலை மாவட்டத்தில் 4500 ஹெக்டயர் புதிய விவசாய நிலங்களுக்கும் தற்போதுள்ள 1500 ஹெக்டயர் விவசாய நிலங்களுக்கும் நீர்ப்பாசன வசதி கிடைக்கும். அத்தோடு பதுளை, மொனராகலை, ஹம்பாந்தோட்டை பிரதேசங்களின் குடிநீர் மற்றும் தொழிற்சாலை நீர் தேவைகளுக்கு 39 மில்லியன் கன மீற்றர் நீரையும் வழங்க முடியும். இதனால் வருடாந்தம் 290 ஜிகாவாட் மின்சாரத்தை தேசிய மின்சாரக் கட்டமைப்பிற்கு வழங்க முடியும்.

இந்நிகழ்வில் பிரதமர் தினேஷ் குணவர்தன, அமைச்சர்களான நிமல் சிறிபாலடிசில்வா, அலிசப்ரி, மஹிந்த அமரவீர, கஞ்சன விஜேசேகர, இராஜாங்க அமைச்சர்களான சஷீந்திர ராஜபக்ச, தாரக பாலசூரிய, விஜித பேருகொட, சிறிபால கம்லத், டி.வி.சானக்க, தேனுக விதானகமகே, ஊவா மாகாண ஆளுநர் ஏ.ஜே.எம். முஸம்மில், தென் மாகாண ஆளுநர் விலி கமகே. கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான், நாடாளுமன்ற உறுப்பினர்களான சமல் ராஜபக்ச, ரவூப் ஹக்கீம், வடிவேல் சுரேஷ், சுதர்சன் தெனிபிட்டிய, திஸ்ஸ குட்டியாராச்சி, டி. வீரசிங்க, எம்.எல்.ஏ.எம். அதாவுல்லா, யதாமினி குணவர்தன மற்றும் அமைச்சர்கள், ஈரான் வெளியுறவு அமைச்சர் கலாநிதி ஹூசைன் அமீர் அப்துல்லாஹியன், அந்நாட்டு அமைச்சர்கள் உள்ளிட்ட தூதுக் குழுவினர், இலங்கைக்கான ஈரான் தூதுவர் கலாநிதி அலிரேசா டெல்கோஷ் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

## சு.க. பதில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தம்மை நீக்குவதற்கு முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன உள்ளிட்ட நிறைவேற்று சபை எடுத்த தீர்மானத்துக்கு எதிராக இவர்கள் தாக்கல் செய்த முறைப் பாடுகள் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோதே கொழும்பு மாவட்ட நீதிபதி இந்த உத்தரவை பிறப்பித்துள்ளார்.

குறித்த வழக்கு ஆட்சேபனைகளைசமர்ப்பிப்பதற்காகஅழைக் கப்பட்ட போதிலும், பிரதிவாதி சார்பில் ஆஜரான சட்டத்தரணிகள் ஆட்சேபனைகளைதாக்கல்செய்வதற்கான திகதியை வழங்குமாறு நீதிமன்றில் கோரினர். இதன்படி, ஆட்சேபனைகளை தாக்கல் செய்ய பிரதிவாதிக்கு மே 8 ஆம் திகதி வரை கால அவகாசம் வழங்கிய மாவட்ட நீதிபதி, வழக்கை அன்றைய தினம் மீண்டும் அழைக்குமாறு உத்தரவிட்டார்.

## 5 ஒப்பந்தங்கள்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விக்ரமசிங்கவிற்கும் இடையிலான உத்தியோகபூர்வ சந்திப்பு ஜனாதிபதி அலுவலகத்தில் நடைபெற்றது.

அதனைத் தொடர்ந்து இரு நாட்டு பிரதிநிதிகளுக்கும் இடையில் இருதரப்பு சந்திப்பொன்றும் நடைபெற்றது.

இதன் பின்னர் ஈரானுக்கும் இலங்கைக்கும் இடையில் 5 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்பட்டன.

இலங்கை தேசிய நூலகம்,

தொடர்ச்சி 8ம் பக்கம்....



காலைக்கதிர்
Kalaikkathir

# ஐக்கிய மக்கள் சக்தியுடனான ஒப்பந்தம்; சிறுபான்மைக் கட்சிகளுக்குச் சரிவராது

## முன்னால் பிரதியமைச்சர் அப்துல்லா மஹ்ரூப்




(ஹஸ்பர் ஏ.எச்)

அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் தேசிய அமைப்பாளரும் முன்னால் பிரதியமைச்சரும் அப்துல்லாஹ் மஹ்ரூப் கலந்து கொண்ட ஊடக சந்திப்பு செவ்வாய்க்கிழமை காலை 11 மணியளவில் அவரது கிண்ணியாவில் உள்ள பிரத்தியேக காரியாலயத்தில் இடம்பெற்றது.

இந்த ஊடக சந்திப்பின் போது நாட்டில் நடக்க இருக்கும் இரு தேர்தல்கள் பற்றி கருத்து தெரிவித்தார். பொதுத் தேர்தலும் ஜனாதிபதி தேர்தலும் இவ் வருடத்துக்குள் நடத்துவதற்கான தீர்மானத்தை அரசாங்கம் தீர்மானிக்கும் விடயமாகும். ஜனாதிபதி தேர்தல் என்பது செப்டரெம்பர், ஒக்ரோபர் மாதத்துக்கு இடையில் நடத்தப்பட்டு புதிய ஜனாதிபதியைத் தேர்வு செய்ய வேண்டும் .மே 1 இல் இருந்து ஜூன் வரை தேசிய மட்டத்தில் பல முடிவுகளை தேர்தல் ரீதியாக மாற்றத்தை செலுத்தும் .. சிறு பான்மை மக்கள் பல முறை ஏமாற்றபடுகிறார்கள். அகில இலங்கை மக்கள் காங்கிரஸ், மலையக முன்னணி ,ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சிகளின் கடந்த கால ஜனாதிபதி தேர்தல் தொடக்கம் பொதுத் தேர்தல் வரை பல ஒத்துழைப்புக்களை ஐக்கிய மக்கள் சக்திக்கு வழங்கியுள்ளது. ஆனாலும் அந்த தலைமையோ கட்சியோ சரியாக நடந்து கொண்டதாக தெரியவில்லை. 55 லட்சம் வாக்குகளை பெற்ற போது அதில் சிறு பான்மை சமூகத்தின் முக்கிய 3 கட்சிகளான மக்கள் காங்கிரஸ், மலையக முன்னணி, முஸ்லிம் காங்கிரஸ் கட்சிகளின் 25 லட்சம் வாக்குகள் காணப்படுகிறது. ஜே. ஆர் காலத்தில் தமிழ் கட்சிகள் சரியான முடிவுகளை சிறுபான்மை சமூகத்தின் தேசிய நலன் கருதி எடுத்திருந்தனர். தற்போது சுரேஷ் பிரேமச்சந்திரன் இது தொடர்பில் முன்னெடுப்பது பற்றி எந்தவகையான தாக்கத்தை செலுத்தும் என்பது தெரியாது .தேசிய அரசாங்கம் உருவாக்கத்தில் தான் அதிக வாய்ப்புகள் உள்ளன. பொதுத் தேர்தலின் பின்பே ஜனாதிபதி தேர்தல் மூலமாக தேசிய அரசை உருவாக்க முடியும். தனி ஒரு கட்சியால் ஆட்சியமைக்க முடியாது. தற்போது இருக்கும் அரசாங்கத்தில் பொது ஜன பெர முனவை சேர்ந்த கட்சிகளை கொண்ட பெரும்பான்மை அரசாங்கம் உள்ளது. இதனால் பொதுஜன பெரமுன கட்சிக்குள் பிளவு ஏற்பட்டுள்ளது இதன் மூலம் ஐக்கிய மக்கள் சக்தியின் கட்சியை சேர்ந்தவர்களும் அங்கு உள்ளனர். எனவே தான் ஐக்கிய மக்கள் சக்தியுடனான எந்த ஒப்பந்தத்தையும் செய்வதை தற்போது ஏற்க முடியாது. - என்றார். (05)

# மாவடிப்பள்ளி பிரதேசத்தில் இலவச அரிசி விநியோகம்



(எம்.எஸ்.எம்.ஸாகிர்)

மகளிர் சிறுவர் விவகார மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சின் அனுசரணையில் மாவடிப்பள்ளி பிரதேசத்தில் குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கு இலவச அரிசி விநியோகம் செய்யும் தேசிய நிகழ்வு - 2024 ஞாயிற்றுக்கிழமை மாவடிப்பள்ளியில் இடம்பெற்றது.

காரைதீவு பிரதேச செயலக அபிவிருத்தி குழு தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான எஸ்.எம்.எம். முஷாரப் பிரதம அதிதியாகக்கலந்துகொண்டுபயனாளி களுக்குஅரிசிகளைவழங்கிவைத்தார்.

இந்த நிகழ்வில் காரைதீவு பிரதேச செயலாளர் எஸ்.ஜெகராஜன், மாவடிப்பள்ளி ஜும்ஆப் பள்ளி வாசல் தலைவர் மற்றும் ஊர் முக்கியஸ்தர்களும் கலந்து சிறப்பித்தனர்.இதன்போது மாவடிப்பள்ளி அபிவிருத்தி சம்பந்தமாக கலந்துரையாடல் ஒன்று நடைபெற்றதும் குறிப்பிடத்தக்கது.(05)



# சிவனொளிபாதமலை யாத்திரீகர்களின் செயற்பாடுகளால் சுற்றாடலுக்கு பாதிப்பு




சிவனொளிபாத மலைக்கு செல்லும் யாத்திரீகர்களால் போடப்படும் கழிவுப்பொருள்களால் சுற்றாடல் மாசடைகின்றது என சுற்றாடல் அதிகாரி தெரிவிக்கின்றார்.

இவ்வருட ஆரம்பமான சிவனொளி பாதமலை யாத்திரை காலத்தில் நல்லதண்ணியிலிருந்து - சிவனொளி பாத மலைக்கு செல்லும் வீதியில் உள்ளூர் யாத்திரிகர்களால் 25 தொன் மக்காத திண்மக் கழிவுகள் கொட்டப்பட்டுள்ளன.

அவற்றில் 03 தொன் பிளாஸ்டிக் போத்தல்கள் உள்ளன என மஸ்கெலியா பிரதேச சபையின் சுற்றாடல் உத்தியோகத்தர் தெரிவித்துள்ளார்.

இவ்வருடம் (2023ஃ2024) சிவனொளிபாத மலை பருவகாலம் ஆரம்பித்து 5 மாதங்களில் நல்லதண்ணி - சிவனொளிபாத மலை செல்லும் வழித்தடத்தில் இருந்து யாத்திரைக்கு வந்த உள்நாட்டு சுற்றுலாப் பயணிகள் சுமார் 25 தொன் மக்காத திண்மக்கழிவுகளை சுற்றாடலில் வீசி சென்றுள்ளனர்.

இதில் சுமார் 03 தொன் பிளாஸ்டிக் போத்தல்கள் மட்டுமே உள்ளதாக மஸ்கெலியா பிரதேச சபையின் சுற்றாடல் உத்தியோகத்தர் திருமதி ரசிகா சமரநாயக்க தெரிவித்தார்.

05 மாதங்களாகத் தொடரும் பருவகால நிகழ்வின் போது மஸ்கெலியா பிரதேச சபைக்குட்பட்ட சுற்றாடல் பிரிவினரால் நல்லதண்ணி - சிவனொலி பாத மலை வீதி மற்றும் நல்லதண்ணி நகர வீதிகளில் தேங்கும் மக்காத திண்மக் கழிவுகள் சேகரிக்கப்பட்டு அகற்றப்படுகின்றன.

2023 டிசெம்பரில், சிவனொலி பாத மலை யாத்திரை காலம் தொடங்கியதில் இருந்து, வார இறுதி நாள்களிலும், வார நாள்களிலும் அதிக எண்ணிக்கையிலான யாத்திரீகர்கள் வருகை தருவதால், மக்காத தின்மக்கழிவுகள் மற்றும் அகற்றப்படும் குப்பைகளின் அளவு அதிகமாக உள்ளது என்று சுற்றுச்சூழல் அதிகாரி மேலும் கூறினார்.

இக்கழிவுகள் யாவும் பிரதேச சபையின் பணியாளர்களால் சேகரிக்கப்பட்ட பின்னர் மஸ்கெலியா, ரிக்கட்டான் பகுதியில் நிறுவப்பட்டுள்ள கழிவு மறுசுழற்சி நிலையத்திற்கு கொண்டு செல்லப்படுகிறது.

இந்த ஆண்டு சிவனொலி பாத மலை பருவகாலம் முடிய இன்னும் ஒரு மாதம் உள்ளது. எதிர் வரும் வைகாசி விசாகம் பௌர்ணமி நாளில் நிறைவு பெறும்.(05)

# மேல்கொத்மலை நீர்த்தேக்கத்தின் வறட்சியால் நீர் மட்டம் குறைந்தது

மேல் கொத்மலை நீர்த்தேக்க பகுதிகளில் நிலவும் கடும் வெப்பம் காரணமாக செயின்ட்கிளேர் நீர்வீழ்ச்சி மற்றும் டோவோன் நீர்வீழ்ச்சிகளின் நீர் கொள்ளளவு குறைந்துள்ளது.

உள்நாடு மற்றும் வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகளைக் கவர்ந்த நீர்வீழ்ச்சியாக இந்த இரண்டு நீர்வீழ்ச்சிகளும் விளங்குகின்றன.

இதேவேளை, மேல் கொத்மலை பகுதிகளில் நிலவும் கடும் வெப்பம் காரணமாக மேல் கொத்மலை நீர்த்தேக்கத்தின் நீர் மட்டம் குறைந்துள்ளதாக நீர்த்தேக் கங்களுக்குப் பொறுப்பான பொறியியலாளர்கள் தெரிவித்துள்ளனர். (05)

காலைக்கதிர் Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## இன்னும் திருந்தவில்லை

**மனித உரிமை மீறல்களில் ஈடுபடும் அதிகாரிகளை அடையாளம் கண்டு தண்டிக்க இலங்கை மிகக் குறைந்த அளவிலேயே நடவடிக்கைகளை எடுத்துள்ளது என்று அமெரிக்க இராஜாங்க திணைக்களத்தின் ஜனநாயகம், மனித உரிமைகள் மற்றும் தொழிலாளர் பணியகம் தெரிவித்துள்ளது. இலங்கையின் மனித உரிமைகள் நடைமுறைகள் தொடர்பாக அது வெளியிட்டுள்ள 2023 அறிக்கையில் அது இந்தக் குற்றச்சாட்டை முன்வைத்துள்ளது.**

**சட்டத்திற்குப் புறம்பான கொலைகள், சித்திரவதை அல்லது கொடூரமான, மனிதாபிமானமற்ற, அல்லது இழிவான நடத்தை அல்லது ஆளும் தரப்பின் தண்டனை, கடுமையான மற்றும் உயிருக்கு ஆபத்தான சிறை நிலைமைகள் மற்றும் தன்னிச்சையான கைது அல்லது காவலில் வைத்தல் போன்ற குறிப்பிடத்தக்க மனித உரிமைகள் பிரச்சினைகள் இலங்கையில் கணிசமாகப் பதிவாகியுள்ளன என்று அறிக்கை கூறுகிறது.**

**'ஆளும் தரப்பு அல்லது அதன் முகவர்கள் சட்டத்திற்குப் புறம்பான கொலைகள் உட்பட தன்னிச்சையான கொலைகளை இந்த ஆண்டில் செய்ததாகப் பல அறிக்கைகள் வந்துள்ளன. காவல்துறையின் காவலில் பல இறப்புகள் சம்பவித்துள்ளன. இதே மாதிரி பல சம்பவங்கள் நடந்தன. விசாரணையின் ஒரு பகுதியாக, சந்தேகநபர்களை குற்றம் நடந்த இடத்திற்கு பொலிஸார் அழைத்துச்சென்றபோது அல்லது விசாரணையின்போது சந்தேகநபர்கள் அவர்களை தாக்கியதாகவோ அல்லது தப்பிக்க முயன்றதாகவோ தெரிவித்து இந்த இறப்புகள் நிகழ்ந்துள்ளன. அனைத்தும் காவல்துறையினரின் சட்டத்துக்குப் புறம்பான கொலைகள்' என்று அந்த அறிக்கை மேலும் கூறியது.**

**பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்ட பலரை ஆளும் தரப்பு பிணையில் விடுவித்துள்ளதாகவும், அதே சமயம் லெஸ்பியன், ஓரினச்சேர்க்கை, இருபாலினம், திருநங்கை, வினோதமான அல்லது இடை பாலின நபர்களின் உரிமைகளை மதிக்கவும், திருநங்கைகளை கைது செய்து துன்புறுத்துவதை நிறுத்தவும் காவல்துறை புதிய வழிகாட்டுதல்களை வெளியிட்டது என்றும் குறிப்பிடும் அறிக்கை இவை நல்ல மாற்றங்கள் என்றும் வரவேற்றுள்ளது.**

**ஆளும் தரப்பை விமர்சிப்பவர்களைக் கைது செய்து தண்டிக்கவும், கொள்கைரீதியான முயற்சிகள் நடக்கின்றன என்றும் இதற்கும் அதிகாரிகள் மீதான விமர்சனத்தைத் தடுக்கவும், பயங்கரவாதத் தடைச் சட்டம், நிகழ்நிலை பாதுகாப்புச் சட்டம், தண்டனைச் சட்டங்களை அதிகாரிகள் தொடர்ந்து பயன்படுத்துகின்றனர் என்றும் அறிக்கை கண்டிக்கின்றது.**

**அதிகாரிகளின் ஊழலுக்கு எதிராக குற்றவியல் தண்டனைச் சட்டத்தைச் செயற்படுத்த முடியும். ஆனால் ஆளும் தரப்பு அந்தச் சட்டத்தை திறம்பட செயல்படுத்தவில்லை.**

**ஆளும் தரப்பின் மிக உயர்ந்த மட்டங்கள் உட்பட அனைத்துத் தரப்புகளிலும் ஊழல் ஒரு குறிப்பிடத்தக்க மற்றும் தொடர்ச்சியான பிரச்சனையாக இருந்தது என்றும் அறிக்கை சுட்டிக்காட்டியுள்ளது.**

**நீதிக்குப் புறம்பான கொலைகளை போர்க் காலங்களில் செய்து பழக்கப்பட்டுவிட்ட காவல்துறையினர் அதிலிருந்து இப்போது மீள முடியாமல் இருக்கிறார்கள் என்பதையே இந்த அறிக்கை காட்டுகின்றது.**

**அதிலும் மனித உரிமைகளின் காவலர் என்று தன்னைக் காட்டிக்கொண்ட ஒருவர் அரசுத் தலைவராகப் பதவியில் இருக்கும்போதே இந்தளவுக்கு மனித உரிமை மீறல்கள் இடம்பெறுவது வேதனையானது; வெட்கக்கேட்டானது. இது குறித்து அரசுத் தலைவர் ரணில் விக்கிரமசிங்க பெரிதும் கவனம் செலுத்த வேண்டும்.**

**ஏற்கனவே போரால் அதிகம் பாதிப்புக்களை எதிர்கொண்ட மக்களை மேலும் வதைக்காமல் மனித உரிமைகள் விடயத்தில் முன்னேற்றகரமான பாதையைத் தேர்ந்தெடுக்க இனியாவது ஆளும் தரப்புக்கள் முன்வரவேண்டும்.**

# விவசாயத்திலும் செயற்கை நுண்ணறிவு!

**கே. சண்முகம்**

செயற்கைநுண்ணறிவுத்தொடர்பாகதொடக்கத்தில் சில கண்டுபிடிப்புகள் வெளிவந்தபோது எவரும் அவற்றைப் பெரிதாக கவனத்தில் கொள்ளவில்லை. ஆனால், ஜெனரேட்டிவ் செயற்கை நுண்ணறிவு என்ற புதிய தொழில்நுட்பம் அறிமுகமானபோது அது அனைவரது கவனத்தையும் ஈர்த்தது. அது மட்டுமல்ல, அதன் செயல்பாடு அனைவரையும்




வியப்பில் ஆழ்த்தியுள்ளது. அந்த ஜெனரேடிவ் செயற்கை நுண்ணறிவுத் தொழில்நுட்பம், புதிது புதிதாக பல கண்டுபிடிப்புகளை உருவாக்குவதற்காம் பேருதவி புரிந்து வருகின்றது.

செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பம் பற்றி முதலில் நாம் அறிந்துகொள்ள வேண்டும். நாம் ஒரு இயந்திரத்திற்குச் சில பணிகளையோ, செயல்களையோ செய்து முடிக்க வேண்டுமென்று தொழில்நுட்ப ரீதியில் கட்டளையிட்டால், நாம் சொன்னபடி அந்த இயந்திரம் குறித்த நேரத்தில் கொடுத்த வேலையை இம்மி பிசகாமல் செய்து முடிக்கும்.

எடுத்துக்காட்டாக, 'எந்திரன்' என்கிற திரைப்படத்தில் ரோபோவே ஒரு பாத்திரமாக உருவாக்கப்பட்டிருக்கும். கதாநாயகன் அந்த ரோபோவிடம் தொலைக்காட்சி பெட்டியைப் போடு என்று சொன்னவுடன், ரோபோ தொலைக்காட்சிப் பெட்டியைக் கீழே போட்டு உடைத்து விடும். அந்த இயந்திரத்திற்கு செயற்கை நுண்ணறிவை இணைத்து பயிற்சி கொடுத்து இருந்தால் அந்த ரோபோ தொலைக்காட்சிப் பெட்டியைக் கீழே போட்டிருக்காது. தொலைக்காட்சியை இயக்கியிருக்கும்.

நமக்கு ஏற்கெனவே நன்கு அறிமுகமான கணினி இயந்திரத்திற்கு பயிற்சி மேல் பயிற்சி கொடுத்து அந்த இயந்திரத்தை அறிவுள்ள இயந்திரமாக மாற்றுவதுதான் செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பம்.

சினிமா பாடல்களை எந்தவிதத் தடுமாற்றமுமின்றி சரளமாகப் பாடும் திறன் பெற்ற ஒருவரிடம், ஒரு திருக்குறள் சொல்லச் சொன்னால் அவரால் சொல்ல இயலாது. அதற்குக் காரணம் அவரது மூளையின் கற்றல் குறைபாடுதான். அவருக்கே திருக்குறளைப் படிப்பதற்கு மீண்டும் மீண்டும் பயிற்சி அளித்தால் அவரால் அனைத்துக் குறளையும் எளிதாகக் கூற இயலும். அதுபோலவே இயந்திரத்திற்கு நாம் பயிற்சி அளித்தால் அதன் செயற்கை நுண்ணறிவு சிறப்பாக வெளிப்படும்.

மனித மூளையின் செயல்பாடுகளை அப்படியே கணினிக்குள் செயற்கையாகப் புகுத்தி, மனிதகுலமே வியந்துபார்க்கும் அளவிற்கு வளர்ந்துகொண்டிருக்கும் அடுத்தகட்ட தொழில்நுட்ப செயல்பாடு தான் ஜெனரேடிவ் செயற்கை நுண்ணறிவு என்பது. இதனை இன்னும் எளிமையாக சொல்ல வேண்டுமென்றால், ஒரு கணினிக்கு நாம் சொல்லி கொடுப்பதன் மூலம் அது திறமையாக செயல்பட்டு நாம் கேட்கும் கேள்விக்கு பதில் அளிப்பது, நம் கட்டளையை ஏற்றுச் செயல்படுவது - இவைதான் ஜெனரேடிவ் செயற்கை நுண்ணறிவு.

தொடக்ககால செயற்கை நுண்ணறிவு என்பது, ஒரு பணியைச் செய்வதற்கு, தரவுகளின் அடிப்படையில் பயிற்சியளிக்கப்பட்ட இயந்திரக்கற்றல் வழிமுறைகளை உள்ளடக்கியது. பாரம்பரிய இயந்திரக் கற்றல் நெறிமுறைகள் மூலம் சரியான வெளியீட்டை உருவாக்குவதற்குப் பயிற்சியளிக்கப்படுகிறது.

இந்த ஜெனரேடிவ் செயற்கை நுண்ணறிவின் மூலம் செயல்படும் சாட்ஜிபிடி என்பது பல தகவல்களை உருவேற்றி பயிற்சி கொடுத்து உருவாக்கப்பட்ட தொழில்நுட்பமாகும். கடந்த 2022 நவம்பர் 30-ஆம் தேதி அறிமுகமான இந்தத் தொழில்நுட்பத்தை முதல் ஐந்து நாட்களிலேயே 10 லட்சம் பயனாளர்கள் பயன்படுத்தியுள்ளனர். மற்ற தொழில்நுட்பங்களான நெட்பிலிக்ஸ் 10 லட்சம் பயனாளர்களைப் பெறுவதற்கு 41 மாதம் ஆயிற்று. அதுவே, முகநூலுக்கு 10 மாதம்; இன்ஸ்டாகிராமுக்கு 2.5 மாதம் ஆயிற்று. ஆனால் ஐந்து நாட்களில் சாட்ஜிபிடி தொழில் நுட்பம் அசுர வளர்ச்சி பெற்று அனைவரையும் வியப்பில் ஆழ்த்தியது.

2022-ஆம் ஆண்டு வரை கிடைத்த தரவுகளை வைத்து உருவாக்கப்பட்ட சாட்ஜிபிடிக்கும் கூகுளுக்கும் உள்ள வேறுபாடு என்னவென்றால், கூகுளில் ஒன்றைத் தேடும்போது நமக்கு அது தொடர்பான நிறைய இணைப்புகள் கணினி திரையில் தோன்றும். அதிலிருந்து நமக்குத் தேவையான இணைப்பை சொடுக்கி அதில் இருந்து தேவையானதைப் பெற்றுக்கொள்ள முடியும். ஆனால் சாட்ஜிபிடியில் இதுபோல தேடித்தேடி பல இணைப்புகளைச் சொடுக்க தேவையில்லை.

'கணினித்தமிழ் என்றால் என்ன' என்ற கேள்வியை சாட் ஜிபிடியில் நாம் பதிவிட்டால் போதும். உடனே அதற்கான விடை நமக்கு கிடைத்துவிடும். என்ன ஆச்சரியம்! குறைந்த உழைப்பில் அதிக தேடல் இல்லாமல் இதோ நீங்கள் கேட்ட தகவல் என்று கண்ணிமைக்கும் பொழுதில் நமக்குத் தரும் அதிசய தொழில்நுட்ப அட்சய பாத்திரமாக இந்த சாட்ஜிபிடி திகழ்கிறது.

முன்பொரு காலத்தில் நூலகத்திற்குச் சென்று புத்தகங்களில் தேடிதேடிப் படித்தவை அனைத்தும் பின்னர் கூகுளில் கிடைத்தன. தற்போது அனைத்துத் தகவல்களும் உடனடியாக, வெகு துல்லியமாக சாட்ஜிபிடி மூலம் கிடைக்கிறது. இப்படிக் கிடைப்பதில் நன்மை இருந்தாலும், இதில் ஓர் ஆபத்தும் உள்ளது.

இப்படி எல்லாமே உடனுக்குடன் கிடைப்பதால் மனிதர்களை இந்தத் தொழில்நுட்பம் சோம்பேறிகளாக்கிவிடுமோ என்கிற கவலையும் நிபுணர்களுக்கு ஏற்பட்டுள்ளது. மனிதர்கள் தகவல்களைத் தேடித்தேடிக் கண்டுபிடித்த நிலை மாறி, அவை அவர்களுக்கு உடனடியாகக் கிடைப்பதால் மனிதர்கள் சிந்தனையை இழந்துவிடும் நிலையை சாட்ஜிபிடி உருவாக்கி விடுமோ என்ற அச்சம் எழுந்துள்ளது.

மேலும், சாட்ஜிபிடி போன்று மிகவும் எதிர்பார்க்கப்பட்ட கூகுள் நிறுவனத்தின் செயற்கை நுண்ணறிவுக் கருவி தான் 'பார்ட்' என்பது. இதுவும் அண்மையில் அறிமுகப்படுத்தப்பட்டுவிட்டது. மைக்ரோசாஃப்டின் செயற்கை நுண்ணறிவான சாட்ஜிபிடிக்குப் போட்டியாக 'பார்ட்' செயல்படும் என்று பரவலாகக் கூறப்பட்டது. இந்நிலையில், இந்த இரண்டு செயற்கை நுண்ணறிவு கருவிகள் மட்டுமல்லாமல், வணிக நோக்கில் பலவித செயற்கை



நுண்ணறிவுக் கருவிகள் உருவாக்கப்பட்டு, அவை ஒன்றோடொன்று போட்டி போட்டுக் கொண்டு இருக்கின்றன.

இந்த ஜெனரேடிவ் செயற்கை நுண்ணறிவு செயல்பாட்டை கூகுள் தேடுபொறியில் இணைத்தால் எப்படி இருக்கும் என்று கற்பனை செய்து பாருங்கள். கூகுளில் தேடினால் நாம் தேடிய தலைப்பின் இணைப்புதான் கிடைக்கும். இதற்கு மாற்றாக, ஜெனரேடிவ் செயற்கை நுண்ணறிவு முறையில் சாட்ஜிபிடியில் நமக்கு தேவையான பதில் உடனடியாக கிடைக்குமாறு உருவாக்கப்பட்டுள்ளது.

சாதாரணமாக ஒரு விஷயத்தை கூகுள் தேடுவதற்கும், செயற்கை நுண்ணறிவு சேர்க்கப்பட்ட கருவியின் தேடலுக்கும் வேறுபாடு உண்டு. இரண்டிலும் கிடைக்கும் முடிவுகள் வேறுவேறுமாதிரியாக இருக்கும். ஜெனரேட்டிவ் செயற்கை நுண்ணறிவுத் தேடல்கள், பயனர்களின் தேடலுக்கு, இணைப்புகளை மட்டும் முடிவுகளாகக் காட்டாமல், உரைப்பகுதியாக, புகைப்படங்களாக, விடியோவாக - இப்படி விஷுவல் முடிவுகளாகக் காட்டுவதோடு, அதற்கான விளக்கத்தையும் காட்டும் என்பது குறிப்பிடத்தக்கது.

# விவசாயத்திலும் செயற்கை நுண்ணறிவு!



இந்த செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பம், வருங்காலத்தில் நம்முடன் இருப்பவர் மனிதரா அல்லது ரோபோவாஎன்றுநாம்குழம்பும்அளவுக்கு மனிதகுலத்தை ஆட்டிப்படைக்கும் என்பதில் ஐயமில்லை.

இது மக்கள் ஐபிஎல் கிரிக்கெட் விளையாட்டை விரும்பிப் பார்க்கும் காலகட்டம். டெஸ்ட் வடிவில் இருந்த கிரிக்கெட் விளையாட்டு ஒருநாள், டி20 என பல்வேறு வகையில் மாற்றம் கண்டு டி10,

ஐபிஎல் என இப்போது மாற்றம் பெற்றுள்ளது. விரைவில் செயற்கை நுண்ணறிவுதொழில்நுட்பம்விளையாட்டு உலகிலும் நீடித்த ஆட்சிபுரிய உள்ளது.

முற்காலத்தில் இந்த கிரிக்கெட்டை இவ்வளவுதொழில்நுட்பவசதியோடுநாம் பார்க்கவில்லை. மேலும் ஆட்டக்காரரின் செயல்பாடுகளை, விக்கெட் விழுந்ததா இல்லையா என்பதை அறிந்துகொள்ள நவீனதொழில்நுட்பம்அப்போதுஇல்லை. ஆனால், தற்போது இந்த கிரிக்கெட் விளையாட்டில் ஏஐ தொழில்நுட்பமும், ஜெனரேடிவ் ஏஐ தொழில்நுட்பமும் அதிகளவு பயன்படுத்தப்படுகிறது.

ஆம், மிகச்சிறப்பாக இதன் பயன்பாடு அமைகிறது. குறிப்பாக விளையாட்டு வீரர்களின்செயல்திறனைகண்காணிக்க இது பெரிதும் உதவும். அதிலும் குறிப்பாக, ஸங்டார்காஸ்ட் எனும் ஏஐ மென்பொருள் மூலம் கிரிக்கெட் விளையாட்டுகளில்ஒவ்வொருபந்துக்கும் வீரர்களின் திறனை கண்காணிக்கும் செயல்பாடுகளை மேற்கொள்ள இயலும். மேலும் விராட்கோலி, டோனி போன்ற வீரர்கள் அடிக்கும் சிறந்த ஷாட்கள், அவர்களது உடல் ஜெனரேட் செய்யும் பவர் ஆகியவற்றையும் அறிய முடியும். அதனைப்பார்த்துஎப்படிமற்றவீரர்களும் இது போன்ற ஷாட்களை அடிக்க பயிற்சி மேற்கொள்ளமுடியும் என்பதையும் அறிந்து கொள்ளலாம்.

மேலும் விளையாட்டு வீரர்கள் தங்களுக்கு உகந்த வகையில் தங்களது விளையாட்டு சார்ந்த உபகரணங்களை வடிவமைக்கவும்இந்தஏஐமென்பொருள் வழிவகை செய்கிறது. விளையாட்டுத் துறை மட்டுமல்லாமல் நாட்டின் முதுகெலும்பாக உள்ள விவசாயத்திலும் செயற்கை நுண்ணறிவு மற்றும் ஜெனரேடிவ் ஏஐ பயன்பாடுகள் அதிக அளவில் வர உள்ளன.

அதாவது, விவசாயத்தில் மனித உழைப்பை மிச்சப்படுத்தும் வகையில், விவசாய ரோபோக்கள் மூலம் விதைகள் நடுதல், அறுவடை செய்தல், சுற்றுச்சூழல் கண்காணிப்பு, மண் பகுப்பாய்வு போன்ற அத்தியாவசிய விவசாயப் பணிகளை மேற்கொள்ள முடியும். பிரபல நிறுவனங்கள்தன்னாட்சிரோபோக்களை உருவாக்கி, மனிதர்களை விட விரைவில் செயல்களை செய்து முடிக்கும் வகையில் திட்டமிடப்பட்டு வருகிறது.

இவை மட்டுமல்லாமல், பயிர் மற்றும் மண் கண்காணிப்பு செயல்பாடுகளில், ட்ரோன்கள் மூலமோ, மென்பொருள் அடிப்படையிலான தொழில்நுட்பம் மூலமோ பெறப்பட்ட தரவுகளைக்கொண்டு, மண்ணில் உள்ள குறைபாடுகளை எளிதில் கண்டறிய முடியும். அதன் அடிப்படையில் மண்ணின் குறைபாடுகளை எளிதில் களைய முடியும்.

இப்படியாகப் பல்வேறு துறைகளில் இந்த செயற்கை நுண்ணறிவும் ஜெனரேடிவ் ஏஐ தொழில்நுட்பமும் விரிந்து பரவிக் கொண்டிருக்கின்றன. எதிர்காலத்தில்ஐம்பூதங்களின்வரிசையில் ஆறாம்பூதமாகசெயற்கைநுண்ணறிவும் சேர்ந்துகொள்ளும் என்று கூறுவது மிகையல்ல.



# இலஞ்சம்பெற்ற குற்றச்சாட்டு கைதான காதி நீதிபதிமறியலில்



(பாறுக் ஷிஹான்)

விவாகரத்து சான்றிதழ் ஒன்றை வழங்குவதற்காக 5000 ரூபாவை இலஞ்சமாக கோரிய புத்தளம் காதி நீதிபதிக்கு புத்தளம் நீதிமன்ற நீதிவான் 14 நாள்கள் விளக்கமறியலில் வைக்க உத்தரவு பிறப்பித்துள்ளார்.

கடந்த செவ்வாய்க்கிழமை பிற்பகல் குறித்த காதி நீதிபதி முகமட் என்பவரை அணுகி விவாகரத்து சான்றிதழ் ஒன்றை வழங்குவதற்காக ரூபா 5000 இலஞ்சமாக பெற்ற குற்றச்சாட்டு அடிப்படையில் மாறுவேடத்தில் சென்ற இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழு அதிகாரிகளால் கைது செய்யப்பட்டிருந்தார்.

இதன் போது கைது செய்யப்பட்ட சந்தேக நபரான காதி நீதிபதி அன்று இரவு புத்தளம் நீதிமன்ற நீதிவான் முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்ட போது 14 நாள்கள் மே 06 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

கடந்த காலங்களில் குறித்த காதி நீதிபதி தொடர்பிலான விமர்சனங்கள் மற்றும் அவரின் முறையற்ற செயற்பாடுகள் சமூக ஊடகங்களில் வெளியாகி இருந்ததுடன் இவ்விடயம் தொடர்பாக புத்தளம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அலி சப்ரி ரஹீம் தொடர்ச்சியான முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றிருந்தன.

இதற்கமைய ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க பிரதமர் மற்றும்நீதிஅமைச்சருக்கும்நீதிச்சேவைஆணைக்குழுவுக்கும் இது தொடர்பான முறைப்பாடுகள் முன்வைக்கப்பட்டமை கறிப்பிடத்தக்கது.(05)




கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இற்கு விசேட விலைக்கழிவாக
30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து
வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with
Panner & Ghee - 900/=
Chikne Fried Rice with
Vegetable - 1150/=
Kothu Rotty With Vegitable
In Indian Style
DESSERT
Ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
Ice Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
JUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swehpees Tin - 250/=
Coca Cola Tin - 250/=

# மட்டக்களப்பு, ஆரையம்பதி கடற்கரையில் பட்ட திருவிழா



(அஸ்ஹர் இப்றாஹிம்)

சர்வமத சின்னங்களையிட்டு பட்டம் செய்து பறக்கவிட்ட மாணவன் முதலிடம் மட்டக்களப்பு ஆரையம்பதி கடற்கரையில் பட்டத் திருவிழா சனிக்கிழமை மாலை இடம் பெற்றது.

இதில் முதல் மூன்று இடங்களையும் பெற்ற போட்டியாளர்களுக்கு பெறுமதி வாய்ந்த பரிசில்கள் வழங்கப்பட்டன.

ஆரையம்பதி ஆரையூர் விளையாட்டுக் கழகத்தின் தலைவர் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் ஆரையம்பதி கந்த சுவாமி ஆலயத்தின் பிரதம குரு உமாசுத சர்மா , கிழக்கு மாகாண விளையாட்டு திணைக்களத்தின் மட்டக்களப்பு மாவட்ட சிரேஷ்ட விளையாட்டு உத்தியோகத்தர் வேலுப்பிள்ளை ஈஸ்வரன் உட்பட பிரமுகர்கள் முக்கியஸ்தர்கள் என பலரும் கலந்துகொண்டனர்.



ஆரையம்பதி ஆரையூர் விளையாட்டுக் கழகத்தால் முதல் தடவையாக இந்தப் பட்டத் திருவிழா அறிமுகப் படுத்தப்பட்டுள்ளது.

இந்த பட்டத் திருவிழாவில் 30 இற்கும் மேற்பட்ட போட்டியாளர்கள் பங்கு பற்றினர்.

இதில் ஆரையம்பதி மகா வித்தியாலயத்தில் பத்தாம் ஆண்டில் கல்வி கற்கும் ஆரையம்பதியைச் சேர்ந்த ரவீந்திரன் சோபிதன் முதல் இடத்தைப் பெற்றுக்கொண்டார்.

இந்த பட்டத் திருவிழாவில் பெருமளவிலான பொது மக்கள், சிறுவர்கள் கலந்து கொண்டு பட்டத் திருவிழாவைக் கண்டுகளித்தனர். (05)

# தடைசெய்யப்பட்ட பிரமிட் திட்டங்களை நடத்தும் 8 நிறுவனங்களின் பெயர் பட்டியல் வெளியானது

## மத்திய வங்கி எச்சரிக்கை

**பொதுமக்களுக்கான அறிவித்தல்**

ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

**பிரமிட் திட்டங்களில் பங்குபற்றுவது ஒரு தண்டனைக்குரிய குற்றமாகும்!**

இலங்கை மத்திய வங்கியானது கீழ் குறிப்பிடப்படும் நிறுவனங்கள் தடைசெய்யப்பட்ட திட்டங்களை நடாத்துகின்றன அத்துடன்/அல்லது நடாத்தியுள்ளன எனத் தீர்மானித்துள்ளது.

இந்த பட்டியலானது 24.08.2023 இல் மத்தியவங்கியால் வெளியிடப்பட்ட நிறுவனங்கள்/ செயலிகளின் பெயர்களுக்கு மேலதிகமானதாகும்.

1. Beecoin App/Sunbird Foundation
2. Fast Win (Pvt) Ltd
3. Fruugo Oline App/ Fruugo Oline (Pvt) Ltd
4. Genesis Business School/ Era Miracle (Pvt) Ltd
5. Isimaga International (Pvt) Ltd
6. Ledger Block
7. Qnet/Questnet
8. Ride to Three Freedom (Pvt) Ltd

தடைசெய்யப்பட்ட வகையான பிரமிட் திட்டமொன்றினை நேரடியாக அல்லது நேரடியற்று தொடங்குகின்ற, வழங்குகின்ற, ஊக்குவிக்கின்ற, விளம்பரப்படுத்துகின்ற, கொண்டு நடாத்துகின்ற, நிதியளிக்கின்ற, முகாமைசெய்கின்ற அல்லது பணிக்கின்ற எவரேனும் ஆள் தண்டனைக்குரிய தவறொன்றிற்கான குற்றவாளியாதல் வேண்டும்.

இலங்கை மத்திய வங்கி, இல. 30, சனாதிபதி மாவத்தை, கொழும்பு 01
☎ (Hotline) 1935 / +94 11 247 7966

இலங்கையில் தடைசெய்யப்பட்ட பிரமிட் திட்டங்களை நடத்தும் மேலும் 8 நிறுவனங்களின் விவரங்களை இலங்கை மத்திய வங்கி வெளியிட்டுள்ளது.

இது தொடர்பான அறிவித்தலொன்றை விடுத்து மத்திய வங்கி குறித்த நிறுவனங்கள் தொடர்பான விவரங்களைத் தெரிவித்துள்ளது.

அதுமாத்திரமன்றி இத்தகைய திட்டங்கள் தொடர்பில் மிகுந்த அவதானத்துடனும் விழிப்புடனும் செயற்படுமாறு பொதுமக்களுக்கு ஆலோசனை வழங்கியுள்ளது.

தடைசெய்யப்பட்ட பிரமிட் திட்டத்தை நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ தொடங்கும், வழங்குகின்ற, விளம்பரப்படுத்துகின்ற, நடத்துகின்ற, நிர்வகிக்கின்ற எந்தவொரு நபரும் தண்டனைக்குரிய குற்றத்தைச் செய்கிறார் என்று மத்திய வங்கி கூறுகிறது.

சில பிரமிட் திட்டங்களை நடத்தும் நிறுவனங்கள் இலங்கை மத்திய வங்கியுடன் சில உடன்படிக்கைகளை மேற்கொண்டுள்ளதாகத் தெரிவிக்கும் சில தரப்பினரின் கூற்றுக்களை நிராகரிப்பதாக இலங்கை மத்திய வங்கி சுட்டிக்காட்டியுள்ளது.

இவ்வாறான பிரமிட் திட்டங்கள் தொடர்பில், இலங்கை மத்திய வங்கிச் சட்டத்தின் 83 (இ) பிரிவின் ஏற்பாடுகளின் நியதிகளுக்கமைய சட்ட நடவடிக்கை எடுப்பது தொடர்பில் பரிசீலனை மேற்கொள்ளுமாறு சட்டமா அதிபரைக் கோரியுள்ளதாக இலங்கை மத்திய வங்கி மேலும் தெரிவித்துள்ளது. (05)



காலைக்கதிர் Kalaikkathir

## மைத்திரிக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கப்பட்டுள்ளது.

சுதந்திரக் கட்சியின் செயற்குழு உறுப்பினர் மொன்டேகு சரத்சந்திரவினால் 2022ஆம் ஆண்டுசமர்ப்பிக்கப்பட்டமுறைப்பாடு தொடர்பில் கொழும்பு மாவட்ட நீதிபதி சந்துன் விதான இந்த உத்தரவை பிறப்பித்துள்ளார்.

2019 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளில் கட்சியின் செயற்குழு அமைக்கப்பட்ட விதத்தை மனுதாரர் சவாலுக்கு உட்படுத்தியுள்ளார் என்று மாவட்ட நீதிபதி இதன்போது அறிவித்தார்.

சுதந்திரக்கட்சியின்செயலாளராக இருந்த மைத்திரிபால சிறிசேன, 2015 ஜனாதிபதித் தேர்தலில் பொது வேட்பாளராக களமிறங்கியதைத் தொடர்ந்து, அவர் அக்கட்சியிலிருந்து நீக்கப்பட்டிருந்தார்.

இதனைத் தொடர்ந்து ஜனாதிபதியாக தெரிவானதோடு கட்சியின் யாப்புப்படி மைத்திரிபால சிறிசேன கட்சியின் செயற்குழுவிற்குள்உள்வாங்கப்பட்டு, தலைவராக செயற்பட்டமை தொடர்பிலேயே குறித்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

மைத்திரிபால சிறிசேன சுதந்திரக் கட்சியின் தலைவராக செயற்படுவதற்கு தடை விதித்து கொழும்பு மாவட்ட நீதிமன்றம் பிறப்பித்த இரண்டாவது உத்தரவு இதுவாகும். முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்கவினால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு தொடர்பில் மாவட்ட நீதிமன்றம் ஏற்களவே உத்தரவொன்றை பிறப்பித்திருக்கிறது.

## நீதிபதி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நண்பருடன் விட்ட சவால் காரணமாக இந்தக் கொலையைத் தான் செய்தார் என்று சந்தேகநபர் வாக்குமூலம் வழங்கினார் என்று பொலிஸார் அப்போது தகவல் தெரிவித்திருந்தனர்.

இது தொடர்பான வழக்கு நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போது அரச சட்டவாதியினால் சாட்சிகள் நெறிப்படுத்தப்பட்டனர். முதலாவது கண்கண்ட சாட்சியாளரான நீதிபதி மாணிக்கவாசகர் இளஞ்செழியன் சாட்சியமளித்தார். சந்தேகநபர் சார்பில் சட்டத்தரணி சர்மினி பிரதீபன் சாட்சியைக் குறுக்கு விசாரணை செய்தார்.

துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் இடம்பெற்ற போது நீதிபதி இளஞ்செழியன் யாழ்ப்பாணம் மேல் நீதிமன்ற நீதிபதியாகக் கடமையாற்றக் கொண்டிருந்தார். தற்போது அவர் வவுனியா மேல்நீதிமன்ற நீதிபதியாகவுள்ளார்.

யாழ். மாவட்டம், புங்குடுதீவைச் சேர்ந்த மாணவி வித்தியா, கூட்டு வன்புணர்வின் பின்னர் கொல்லப்பட்டமை தொடர்பான வழக்கினைத் தான் விசாரித்துக்கொண்டிருந்த காலப் பகுதியிலேயே இந்தக் கொலை நிகழ்ந்ததாக நீதிபதி தனது சாட்சியத்தில் தெரிவித்தார். சம்பவம் தன் மீதான ஒரு கொலை முயற்சி என்றும் அவர் தெரிவித்தார்.

எதிரிக் கூண்டில் நிற்கும் சந்தேகநபராலேயே தனது மெய்ப்பாதுகாவலர் சுட்டுக் கொலை செய்யப்பட்டார் என்றும் நீதிபதி அடையாளம் காட்டினார்.

தொடர்ந்து நீதிபதியின் இரண்டாவது மெய்ப்பாதுகாவலரும் சம்பவத்தில் காயமடைந்தவருமான பொலிஸ்கொன்ஸ்டபிள் வழங்கினார். அவரது சாட்சியத்தை மறுநாளுக்கு ஒத்தி வைத்த யாழ். மேல் நீதிமன்ற நீதிபதி சூசைதாசன் வழக்கு விசாரணைகள் இன்று தொடரும் என்றும் அறிவித்தார்.

இந்த வழக்கு விசாரணையில் சாட்சியமளிப்பதற்காக நீதிபதி இளஞ்செழியன் சிறப்பு அதிரடிப் படையினிரின் பாதுகாப்புடன் யாழ். மேல் நீதிமன்றத்திற்கு வருகை தந்திருந்தார்.

## 5 ஒப்பந்தங்கள்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஈரான் தேசிய நூலகம் மற்றும் ஆவணக்காப்பகம் ஆகியவற்றுக்கு இடையில் ஒத்துழைப்பு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டுள்ளது.

தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனம் மற்றும் ஈரானின் கலாசார இஸ்லாமியவழிகாட்டல்அமைச்சுக்கு இடையே திரைப்படத்துறையின் ஒத்துழைப்பு தொடர்பான புரிந்துணர்வு ஒப்பந்தமும் கையெழுத்தானது. ஊடகம் மற்றும் சுற்றுலாத்துறைகளுக்கான ஒப்பந்தங்களும் இருநாடுகளுக்கும் இடையே கையெழுத்திடப்பட்டன.


**காலைக்கதிர் ஆசிரியர்பீட தொடர்புகளுக்கு**

**076 3983858**

**மின்னஞ்சல் முகவரி:**
kalaikkathirnews@gmail.com





# ஆசிரியர் வெற்றிடங்களுக்கான ஆட்சேர்ப்புக்கு நேர்முகத் தேர்வு

அரச பாடசாலைகளில் உள்ள ஆசிரியர் வெற்றிடங்களைநிரப்புவதற்காககடந்தமார்ச்மாதம்2 ஆம்திகதிநடைபெற்றபரீட்சையின்பெறுபேறுகளின் அடிப்படையில் தெரிவு செய்யப்பட்டர்களுக்கான ஆட்சேர்ப்பு நேர்முகத் தேர்வு தொடர்பில் கல்வி அமைச்சு அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளது.

இந்த நேர்முகத் தேர்வுகள் ஏப்ரல் மாதம் 29 ஆம் திகதி முதல் மே மாதம் 9 ஆம் திகதி வரை இசுருபாய கல்வி அமைச்சில் நடைபெறும் என அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அரச பாடசாலைகளில் உள்ள ஆசிரியர் வெற்றிடங்களுக்குதகுதியானவர்களின்பெயர்பட்டியல் மற்றும்அழைப்புக்கடிதம்என்பனகல்விஅமைச்சின் இணையத்தளத்தில்வெளியிடப்பட்டுள்ளன எனவும் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (05)

# முன்னறிவிப்பின்றி நாட்டை விட்டு வெளியேறிய 7 வைத்திய நிபுணர்கள்

தமிழ் மற்றும் சிங்கள புத்தாண்டு விடுமுறைநாள்களில்மாத்திரம்7விசேட வைத்தியர்கள்அவர்கள்கடமையாற்றும் வைத்தியசாலைகளுக்குத் தகவல் தெரிவிக்காமல் நாட்டை விட்டு வெளியேறியுள்ளனர் எனச் சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

அம்பலாந்தோட்டை , பிபில , மெதிரிகிரிய , எம்பிலிப்பிட்டிய , நுவ ரெலியா , மஹியங்கனை மற்றும் மொனராகலை உள்ளிட்ட பிரதேசங் களில் உள்ள வைத்தியசாலைகளில் கடமையாற்றும்விசேடவைத்தியர்களே இவ்வாறு நாட்டை விட்டு வெளியே றியுள்ளனர்.

அதன்படி, நாட்டில் இதுவரையான காலப்பகுதியில் சுமார் 350 இற்கும் மேற்பட்ட விசேட வைத்தியர்கள் நாட்டை விட்டு வெளியேறியுள்ளனர்.

இதன் காரணமாக வைத்திய சாலைகளுக்கு வருகை தரும் நோயாளிகள் பாதிக்கப்பட்டுள்ள நிலையில் சிகிச்சைகள் பிற்போடப் படுவதால்நோயாளிகளின்உயிருக்கும் பாதிப்புஏற்படுமென சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது. (05)

# பொத்துவிலில் ஒரு துண்டுக் காணிகூட முஷாரப்பினால் விடுவிக்கப்படவில்லை

## மக்கள் காங்கிரஸ் உயர்பீட உறுப்பினர் தாஜுடீன் சாட்டை



(ஏ.எம்.ஹஸ்னி)

பொத்துவில் பிரதேச மக்களுக்களுக்காக ஒரு துண்டுக் காணியையேனும் நாடாளுமன்ற உறுப்பினர் முஷாரப் பெற்றுக்கொடுக்கவில்லை என அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் உயர்பீட உறுப்பினரும், பொத்துவில் பிரதேச சபையின் முன்னாள் பிரதி தவிசாளருமான ஏ.எம்.தாஜுடீன் தெரிவித்தார்.

பொத்துவில் பிரதேசத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

பொத்துவிலைப் பொறுத்தவரை செங்காமம், துக்வெல்ல, உடம்பன்குளம், தகராம்பெல, ஆமவெட்டுவான், கிராண்கோவை, சோனிகம உள்ளிட்ட மேலும்பலபகுதிகளில்காணிப்பிரச்சினை உள்ளது. இந்தப் பிரச்சினைகள் எல்லாம் தீர்க்கப்பட்டுள்ளதா? அல்லது ஒரு துண்டு நிலத்தைக்கூட முஷாரப்எம்.பியால்விடுதலைசெய்ய முடிந்ததா? எனப் பகிரங்கமாகக் கேட்டுக்கொள்ள விரும்புகின்றேன்.

மண்மலை விடுதலை செய்யப்பட்டிருப்பதாக பேசுகின்றனர் மண்மலை பிரதேசத்தில் ஏதாவது அபிவிருத்திகள் இடம்பெற்றிருக்கின்றனவா? மக்களுடைய குடியிருப்புக் காணிகள் விடுவிக்கப் பட்டிருக்கின்றதனவா? அங்குள்ள மக்கள் அன்று அனுபவித்த அதே இன்னல்களை இன்றும் அனுபவித்துக்கொண்டே இருக்கின்றனர். இன்று அங்கு மலசலகூடம் கட்டிக்கொள்ள முடியாது. மக்கள் எல்லை வேலிகளை அமைத்துக் கொள்ள முடியாது. குடிநீருக்காக ஒரு கிணற்றைக்கூட நிர்மாணிக்க முடியாது. பெரும்பான்மை இனத்தைச்சேர்ந்தவர்கள் இன்னும்அந்தஇடத்தைசவாலுக்குட்படுத்துகின்றனர்.

இவ்வாறான நிலையில்பொத்துவில்பிரதேசத்தில் அபிவிருத்திகள் இடம்பெறுகின்;றன எனக் கூறுவது அப்பட்டமான பொய்யாகும். பொத்துவில் மக்கள் எதிர்பார்த்த எந்தவொரு அபிவிருத்தி பணிகளும் முஷாரப்எம்.பியால்செய்யப்படவில்லை. அபிவிருத்தி என்பது முஷாரப் எம்.பியைப் பொறுத்தவரை ஒரு மாயை, அவர் இன்னும் மக்களை மடையர்களாக்கி பேஸ்புக்கில் கேவலமான அரசியல் செய்துகொண்டி ருக்கிறார்.

அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சியைப் பொறுத்தவரையில் அது பொத்துவில் மக்களின் தாகத்தை தீர்த்ததொரு கட்சியாகும். அந்த வகையில் பொத்துவிலில் வாழ்கின்ற அனைத்து மக்களும் அந்தக் கட்சிக்கு விசுவாசமாக இருக்கின்றனர். இங்கு தனிப்பட்ட ஒருத்தருக்காக வாக்குகள் இல்லை. மிகக் குறுகிய காலத்துக்குள்ளே இந்தக்கட்சி பொத்துவில் பிரதேசத்தில் அளப்பெரிய சேவைகளை ஆற்றியுள்ளது. இந்தக் கட்சியின் மீது கொண்ட நம்பிக்கையின் காரணமாகவே கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் இங்குள்ள மக்கள் கணிசமான வாக்குகளை வழங்கினர்.

இந்த மக்களால் அளிக்கப்பட்ட வாக்குகள் முஷாரபுக்கானவை அல்ல. இந்தக்கட்சி மிகக் குறுகிய காலத்திலேயே ஆற்றிய அளப்பெரிய சேவைக்கானது. அபிவிருத்தி செய்வது போன்று மாயை காட்டி மக்களை ஏமாற்றிய காலம் மலையேறிவிட்டது. கட்சிக்கும் பொத்துவில் மக்களுக்கும் துரோகம் இழைத்த நாடாளுமன்ற உறுப்பினருக்கு எதிர்வரும் தேர்தலில் பொத்துவில் மக்கள் பாடம் புகட்டுவர். - என்றார். (05)

# பிரபல வர்த்தகரை சுட்டுக் கொலை செய்யத் திட்டமிட்ட இருவர் கைது

கம்பஹாபிரதேசத்தில்உள்ளபிரபல வர்த்தகரான 'ஒஸ்மன்' என்பவரை புத்தாண்டை முன்னிட்டு ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நிகழ்வொன்றில் வைத்து சுட்டுக் கொலை செய்யத் திட்டமிட்ட இருவர் துப்பாக்கிகளுடன் பேலியகொடைகுற்றப்புலனாய்வுப்பிரி வினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

வெவெல்தெனியமற்றும்மினுவாங் கொடைஆகியபிரதேசங்களைச்சேர்ந்த 50 மற்றும் 30 வயதுடைய இருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

தற்போது டுபாயில் தலைமறை வாக உள்ள 'கெஹல்பத்தர பத்மே' மற்றும் அவரது சகாவான 'அவிஷ்க' ஆகியோரின் தலைமையில் இந்த கொலைதிட்டமிடப்பட்டதாகபொலிஸார் தெரிவித்தனர்.

இந்தக் கொலை திட்டத்திற்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த காரொன்று கம்பஹாதனியார்வைத்தியசாலையின் வாகனதரிப்பிடத்தில்நிறுத்திவைக்கப்பட் டிருந்தபோதுபொலிஸாரால்கைப்பற்றப் பட்டுள்ளது.

கம்பஹா நகரின் அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்கு'கெஹல்பத்தரபத்மே' வுக்கு பிரபல வர்த்தகரான 'ஒஸ்மன்' தடையாக இருப்பதால் அவரைக் கொலை செய்ய திட்டமிட்டுள்ளதாக பேலியகொடை குற்றப் புலனாய்வு பிரிவினருக்கு கிடைத்த தகவலின் பேரில் மேற்கொள்ளப்பட்ட சுற்றி வளைப்பில் சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். (05)

# பாதாள உலக குழுக்களை சேர்ந்த மேலும் 4 பேர் கைது

பாதாள உலக செயற்பாடுகளை ஒடுக்குவதற்காக உருவாக்கப்பட்ட 20 குழுவினரால் நாடளாவிய ரீதியில் மேற்கொள்ளப்பட்ட விசேட சுற்றிவளைப்பில் பாதாள உலக குழுக்களைச் சேர்ந்த 4 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதன்போது பாதாள உலக குழுக் களைச்சேர்ந்தவர்களுடன் நெருங்கிய தொடர்புகளைப்பேணியதாகசந்தேகிக்கப் படும் 9 பேரும் கைது செய்யப்பட்டுள் ளனர்.மேல் மாகாணத்தின் தெற்கு பிராந்திய பொலிஸ் குற்றத்தடுப்பு பிரிவினரால் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் கடுவலை மற்றும் அங்கொடை ஆகிய பகுதிகளைச் சேர்ந்த 32, 36, 34 மற்றும் 33 வயதுடைய நான்கு சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கடந்த மாதம் 19 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டஇந்தசுற்றிவளைப்பில் இதுவரை பாதாள உலக குற்றக் குழுக்களைச் சேர்ந்த 544 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.(05)

# போதைப்பொருள்களுடன் கைதான கணக்காளருக்குத் தடுப்புக்காவல்!

(பாறுக் ஷிஹான்)

நீண்ட காலமாக போதைப் பொருள் விநியோகம் மற்றும் பயன்பாட்டில் ஈடுபட்ட குற்றச் சாட்டின் அடிப்படையில் கைதான சந்தேக நபரான கணக்காளரை எதிர்வரும் ஏப்ரல் மாதம் 28 ஆம் திகதி வரை தடுப்புக் காவலில் வைக்குமாறு கல்முனை நீதிவான் நீதிமன்று உத்தரவு பிறப்பித்துள்ளது.

கைதான குறித்த சந்தேக நபரை செவ்வாய்க்கிழமை நீதிமன்றில் ஆஜர்படுத்திய வேளை மேற்கண்டவாறு 05 நாள்கள் தடுப்பு காவல் உத்த ரவு பிறப்பிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

சந்தேக நபரான கணக் காளர் நீண்ட காலமாக போதைப் பொருள் விநியோகம் மற்றும் பயன்பாட்டில் ஈடுபட்ட குற்றச் சாட்டின் அடிப்படையில் மருதமுனை பகுதியில்வைத்து பெரிய நீலாவணை பொலிஸா ரால் திங்கட்கிழமை இரவு கைது செய்யப் பட்டிருந்தார்.

அண்மையில் மருதமுனை நகரை அண்டிய பகுதியில் ஐஸ் மற்றும் கஞ்சா போதைப் பொருளுடன் கைதான சந்தேக நபரின் வாக்குமூலத்தை அடிப்ப டையாகக் கொண்டு பெரிய நீலாவணை பொலிஸார் குறித்த கணக்காளரை கைது செய்ய துரித விசாரணை நடவடிக்கைகளை முன்னெடுத்திருந்தனர்.

இதன்போதுகணக்காளர்வசம் இருந்து ஐஸ் போதைப்பொருள் 840 மில்லி கிராம் கேரளா கஞ்சா 4 கிராமும் 540 மில்லி கிராமும் மீட்கப்பட்டிருந்தமை சுட்டிக்காட்டத்தக்கது.

மேலும் குறித்த சந்தேக நபர் கடந்த காலங்களில் கல்முனை மாநகர சபையின் முன்னாள் கணக்காளராக பணியாற்றியவர் என்பதுடன்தற்போது அம்பாறை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின்கணக்காளராகவும் தற்போது பணியில் இருப்பவர் என பொலிஸ் விசாரணையில் இருந்து தெரிய வந்துள்ளது.

தற்போது 5 நாள்கள் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ள 39 வயது மதிக்கதக்கசந்தேகநபரான கணக்காளரான கமறுத்தீன் முஹம்மதுறியாஸிடம் மேலதிக விசாரணைகளை பெரிய நீலாவணை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

(05)

# யா எல வனப் பகுதிகளில் 5 நாள்களாக சுற்றிவளைப்பு

## விசேட அதிரடிப்படையினர் நடத்தினர்

சட்டவிரோதநடவடிக்கைகளில்ஈடுபடுபவர்களை கைதுசெய்வதற்காகவிசேடஅதிரடிப்படையினர்ஐந்து நாள்களாக யால வனப்பகுதியில் சுற்றிவளைப்பை மேற்கொண்டுள்ளனர் .

சட்டவிரோத நடவடிக்கைகளில் ஈடுபடுப வர்கள், சட்டவிரோத துப்பாக்கிகள் மற்றும் வேட்டையாடுபவர்களை கைது செய்வதற்காகவே யால வனப்பகுதயில் சுற்றிவளைப்பை மேற்கொண்டுள்ளனர் .

இந்தசுற்றிவளைப்பின்போதுயாலவனப்பகுதியில் இரகசியமாக பயிரிடப்பட்டிருந்த ஆறு ஏக்கரில் பயிரிடப்பட்டிருந்த கஞ்சா செடிகளையும் பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் அழித்துள்ளதுடன் வெளிநாட்டில்தயாரிக்கப்பட்டதுப்பாக்கி, உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட துப்பாக்கிகள் 2 மற்றும் 30,450 கிலோ உலர் கஞ்சா ஆகியவையும் விசேட அதிரடிப்படையினரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

இந்தச் சுற்றிவளைப்பில் யால வனப்பகுதியில் பதுங்கியிருந்த 3 சந்தேக நபர்களையும் பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் கைது செய்துள்ள துடன், சந்தேகநபர்கள் விசாரணைகளுக்காக பொலிஸ்நிலையத்தில்ஒப்படைக்கப்படைத்துள்ளதாக பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் தெரிவித் தனர். (05)

# கலந்துரையாடல்

(அஸ்ஹர் இப்றாஹிம்)



கல்முனை மஹ்மூத் மகளீர் கல்லூரி (தேசிய பாடசாலை) யிலிருந்து 2024 ஆம் ஆண்டு க.பொ.த. (உ.த) பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவிகளுக்கு கிழக்கு மாகாணக் கல்வித் திணைக்களத்தால் நடத்தப்படவுள்ள மாகாண மட்டத்திலான பைலட்மதிப்பீட்டுபரீட்சைதொடர்பாக மாணவிகளின் பெற்றோர்களுடனான கலந்துரையாடல் கல்லூரி முதல்வர் ஏ.பி. நஸ்மியா சனூஸ்தலைமையில்இடம்பெற்றது.

மாகாண மட்டத்திலான பைலட் மதிப்பீட்டு பரீட்சையில் பெற்ற பெறுபேறுகளை மாவட்ட அடிப்படையில் இசட் மதிப்பெண் மற்றும் தரவரிசை வழங்கி பகுப்பாய்வு செய்தல், உயர்தர பிரிவின் கற்றல், கற்பித்தல், பாடப்பரப்பு நிறைவு தொடர்பான பகுப்பாய்வு,

உயர்தர பரீட்சை எழுதவுள்ள காலப்பகுதியில் மேற்கொள்ளப்பட வேண்டிய செயற்த்திட்டங்கள், உயர்தரபரீட்சையில்மாணவிகளின் பல்கலைக்கழக நுழைவினை அதிகரித்தல், பெற்றோர்கள் பாடசாலையுடன் தொடர்புற வேண்டியதன் அவசியம் என்பன தொடர்பில் விளக்கமளிக்கப்பட்டது.

இக்கலந்துரையாடலில் கலை வர்த்தகப் பிரிவு மாணவிகளின் பெற்றோர் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கதாகும்.

இந்நிகழ்வில் கலை, வர்த்தகப் பிரிவு தலைவி ஜ.எல்.எம்.எச். ஷம்சுல் ஹிதாயாவும் கலந்து கொண்டார்.(05)

# முஸ்லிம் காங்கிரஸ் கிளைகள் புனரமைப்பு



(கே எ ஹமீட்)

ஏறாவூர்நகரசபைஎல்லைக்குள் அமைந்துள்ள 17 கிராம சேவகர் பிரிவுகளுக்கான ஸ்ரீலங்கா முஸ்லிம்காங்கிரஸ்கட்சிகிளைகள் புனரமைப்பு தொடர்பான விசேட கூட்டம் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின்பிரதித்தலைவருமானஅல் ஹாஜ்அலிசாஹிர்மௌலானாவின் தலைமையில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் உயர்பீட உறுப்பினரும், முன்னாள் ஏறாவூர் நகர சபை தவிசாளருமான எம்.எஸ். நளீமின் இல்லத்தில் செவ்வாய்க் கிழமை நடைபெற்றது.

இந்நிகழ்வில்ஸ்ரீலங்காமுஸ்லிம் காங்கிரஸ் கட்சி பிரதி தேசிய அமைப்பாளரும், முன்னாள் கிழக்கு மாகாண அமைச்சருமான எம்.எஸ். உதுமாலெப்பை, அம்பாறை மாவட்ட குழுவின் செயலாளரும், முன்னாள் கல்முனை மாநகர சபை உறுப்பினருமான ஏ.சீ. சமால்டீன், ஏறாவூர்நகரசபைவேட்பாளர்களான ஏ. சீ.எம். நிபாத், ஜே.அகமட் லெப்பை, எஸ்.எம்.ஜப்பார், எம்.ஆர்.ரஜாய், எம்.கே.எம். மனாப், ஆர்.எம். உவைஸ், யூ.எல்.எம்.ரிபாத், நிசார், ரகுமான் மற்றும் கட்சியின் முக்கியஸ்தர்களான சீ.அசனார் லெப்பை, எம்.பீ.எம்.ஏ.சக்கூர் ஆகியோர் கலந்து கொண்டனர்.(05)




காலைக்கதிர்
Kalaikkathir

# வெவ்வேறு இடங்களில் ஹெரோயின் போதைப் பொருளுடன் இருவர் கைது


வெவ்வேறு பிரதேசங்களில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில்ஹெரோயின்போதைப்பொருளுடன் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மேல்மாஸகாண தெற்கு குற்றத் தடுப்பு பிரிவினரால்தெஹிவளை, கரகம்பிட்டியபிரதேசத்தில் மேற்கொண்ட சுற்றிவளைப்பின் போது ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

மற்றைய சந்தேகநபர் கொஸ்வத்தை வைத்தியசாலைக்கு அருகில் தலங்கம பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்; எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இரு சந்தேக நபர்களும் வைத்திருந்த ஹெரோயின் போதைப்பொருள் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளதுடன் கைது செய்யப்பட்ட சந்தேகநபர்கள் 39 மற்றும் 49 வயதுடைய தெஹிவளை மற்றும் பத்தரமுல்ல பிரதேசத்தை சேர்ந்தவர்களாவர்.(05)

# உலகளாவிய இராமகிருஷ்ண மிஷன் பெருந்தலைவராக கௌதமானந்தா



(வி.ரி.சகாதேவராஜா)


உலகளாவிய இராமகிருஷ்ண மிஷன் மற்றும் மடம் ஆகியவற்றின் 17 ஆவது பெருந்தலைவராக துணைத் தலைவர் அதிவணக்கத்துக்குரிய ஸ்ரீமத் சுவாமி கௌதமானந்தா ஜீ நியமிக்கப்பட்டுள்ளார்.

நேற்று (புதன்கிழமை) பேலூர் மடத்தில் நடைபெற்ற மடத்தின் அறங்காவலர்கள் குழு மற்றும் மிஷனின் நிர்வாகக் குழு கூட்டத்தில் இந் நியமனம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

இராமகிருஷ்ண மடம் மற்றும் இராமகிருஷ்ண மிஷன் ஆகியவற்றின் தலைவராக சுவாமி கௌதமானந்தாஜி மகராஜ் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

உலகளாவிய இராமகிருஷ்ணமடம் மற்றும் மிஷனின் துணைத் தலைவரும், சென்னை இராமகிருஷ்ண மடத்தின் தலைவருமாக இருந்த அதிவண ஸ்ரீமத் சுவாமி கௌதமானந்தாஜி மஹராஜ் 5 நாள் விஜயத்தை மேற்கொண்டு கடந்த வருடம் இலங்கை வருகை தந்திருந்தமை தெரிந்ததே.

அகில உலக இராமகிருஷ்ண மிஷனின் 16 ஆவது பெருந்தலைவர் அதி வணக்கத்திற்குரிய சங்ககுரு ஸ்ரீமத் சுவாமி ஸ்மரணானந்தஜி மகராஜ் கடந்த மாதம் (25) திங்கட்கிழமை தனது 94 ஆவது வயதில் இயற்கையெய்தியதை அடுத்து இந்த நியமனம் மேற்கொள்ளப்பட்டமை குறிப்பிடத்தக்கது.(05)



# இணையவழி மூலம் கடன் பெற்று தருவதாகக் கூறி பண மோசடி

## சந்தேகநபர் கைது

இணையவழி மூலம் கடன் பெற்று தருவதாகக் கூறி பண மோசடி செய்ததாகக் கூறப்படும் சந்தேகத்தில் ஒருவர் திஹகொட பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைதுசெய்யப்பட்டவர்காலிஇமதுவபிரதேசத்தைச் சேர்ந்த 32 வயது நபராவார்.

இவருக்கு எதிராக வாகன திருட்டுச் சம்பவம் தொடர்பில் நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ள நிலையில், இவர் நீதிமன்றில் ஆஜராகாமல் தலைமறைவாக இருப்பதாக பொலிஸார் தெரிவித்தனர்.

திஹகொட பொலிஸாருக்கு கிடைத்த தகவலின் பேரில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் சந்தேக நபர் பொரலஸ்கமுவ பிரதேசத்தில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேக நபரிடமிருந்து கைக் கணினி, 6 கையடக்க தொலைபேசிகள் , 8 வங்கிக் கணக்கு அட்டைகள் மற்றும் 40 ஆயிரம் ரூபா பணம் உள்ளிட்ட பொருள்கள் கைப்பற்றப்பட்டுள்ளன.

இவர் இணையவழி மூலம் கடன் பெற்று தருவதாகக் கூறி பல்வேறு பிரதேசங்களில் உள்ள மக்களின் பணத்தைத் தனது வங்கிக் கணக்கில் பெற்று பண மோசடி செய்துள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

இதற்காகஇவர்முகநூல்மற்றும்வாட்சப்உள்ளிட்ட சமூக ஊடகங்களைப் பயன்படுத்தியுள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

இதனையடுத்து சந்தேக நபரை மாத்தறை நீதிமன்றில் ஆஜர்படுத்தியதாக திஹகொட பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.(05)

# முஷாரப் எம்:.பி. கருத்திற்கு கலாநிதி ஜெயசிறில் பதிலடி




கல்முனை வடக்கு பிரதேச செயலகத்தின் பிரதேச செயலாளர் அதிசயராஜ் அரசியல் நடத்துகிறார் என காரைதீவு அபிவிருத்திக்குழு கூட்டத்தில் மிகவும்கேடத்தனமான, ஏற்றுக்கொள்ள முடியாத, மனவேதனையான கருத்து ஒன்றை காரைதீவு ஒருங்கிணைப்பு தலைவரும் அம்பாறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான முஷாரப் தெரிவித்துள்ளார். இந்த கருத்தை வன்மையான கண்டிப்பதாக காரைதீவு பிரதேச சபை முன்னாள் தவிசாளர் ஜெயசிறில் தெரிவித்துள்ளார்.

காரைதீவு பிரதேச செயலக அபிவிருத்தி குழு கூட்டம் தொடர்பான தெளிவூட்டல் ஊடக சந்திப்பொன்றின்போதே அவர் இந்தக் கருத்தைத் தெரிவித்திருந்தார்.

காரைதீவு ஒருங்கிணைப்பு குழு கூட்டம் நடைபெற்றபோது காரைதீவு, கல்முனை வடக்கு, நாவிதன்வெளி ஆகிய தமிழ் மக்கள் புறக்கணிக்கப்பட்டிருப்பதாகவும் கல்முனையில் போராட்டம் நடைபெறுவதாகவும்அங்குஅபிவிருத்தி குழு கூட்டங்கள் நடைபெறவில்லை எனவும் நாவிதன்வெளியிலும் தமிழ் மக்களுக்கு குறைவாக நிதி ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் இதன்போது சுட்டிக்காட்டியிருந்தார் .

அதே போன்று காரைதீவு மக்களுக்கும் குறைவான நிதி ஒதுக்கப்பட்டிருக்கின்ற நிலையில் தனது கேள்விக்கு பதில் வழங்குகின்றபோதே அவர் கல்முனை பிரதேச செயலகம் ஓர் உப பிரதேச செயலகமாகவும் அதை பிரித்து வழங்க முடியாது என்றும் அதை முன்னாள் அரசாங்க அதிபர் உப பிரதேச செயலகம் என்றும் கல்முனை பிரதேச செயலக ஆதிக்கத்திற்குள்தான் இருக்கும் என்றும் அந்த இடத்தில் சுட்டிக்காட்டியிருந்தார்.

கல்முனை வடக்கு பிரதேச செயலகம் தொடர்பாக ஆலய தர்மகர்த்தாக்கள் தன்னிடம் உதவி கேட்டு வந்தனர் எனவும் குறிப்பிட்ட அவர் , தான்தோன்றித்தனமாக இந்த நிதி ஒதுக்கீட்டில் தமிழர்களுக்கு குறைவாக ஒதுக்கியதன் காரணமாக இன்று இந்த அபிவிருத்தி குழு கூட்டத்தை நடத்தக் கூடாது என எதிர்ப்புத் தெரிவித்து காரைதீவு சிவில் அமைப்புக்களும் காரைதீவு மக்களும் ஒன்று திரண்டிருந்தனர். இருந்த போதிலும் நங்கள் இதனை மூன்று கட்டங்களாக யோசனை செய்து முதலில் சமாதான அடிப்படையில் ஆலோசனை செய்து இந்த விடயத்தில் காய் நகர்த்துவோம் என்றுதான் இந்த ஒருங்கிணைப்பு குழு நடைபெற்றது.

ஆனால்காரைதீவுஒருங்கிணைப்பு குழு கூட்டத்திலே கல்முனை பிரதேச செயலகம் தொடர்பாக உண்மையிலே ஏற்றுக்கொள்ளமுடியாத கருத்துக்களை கூறியிருக்கிறார். கல்முனை வடக்கு பிரதேச செயலகம் என்பதுஅமைச்சரவையில்அங்கீகரிக்கப்பட்டு பிரதேசசெயலகமாகநடைமுறைப்படுத்தப்பட்டுவிட்டது. ஆனால் அருகில் இருக்கக்கூடிய பிரதேச செயலக பிரதேச செயலாளரும் சில அரசியல்வாதிகளும் குறித்த வடக்கு பிரதேச செயலகத்திற்கு உரிமை அல்லது அதிகாரங்களை வழங்காமல் சில அரசியல் விளையாட்டுகளை செய்து வருகின்றார்கள்.அதன் ஓர் அங்கமான அரசியல் பின்னணியில் ஒருங்கிணைப்புக்குழு தலைவர் நாடாளுமன்ற உறுப்பினர் முஷாரப் இருக்கின்றார் என்கின்ற சந்தேகம் தனக்குஎழுவதாக முன்னாள் தவிசாளர் ஜெயசிறில் குறிப்பிட்டுள்ளார்.

காரணம் இவர் தனது வாப்பா வீட்டு சொத்து போன்று கல்முனை வடக்கு பிரதேச செயலகம் உப பிரதேச செயலகம்என்றுசொல்வதற்குஅவரிடம் எந்த ஆதாரம் இருக்கின்றது. குறித்த பிரதேச செயலகத்தின் அமைச்சரவை அங்கீகரிக்கப்பட்ட கடிதங்கள் அனைத்தும் பொய் என்றால் இவர் எவ்வாறு அவ்வாறு சொல்லமுடியும் ? எனவும் ஆகையால் மக்களால் ஏற்றுக்கொள்ளமுடியாத கருத்தும் தமிழ் மக்களின் அதிகாரங்களும் உரிமைகளையும் பறிப்பதோடு தமிழ் மக்களுக்கு கிடைக்கின்ற அபிவிருத்தியையும் முடக்கி அவர்களுடைய அரசியலுக்காகவும் அவர்களுடைய மக்களுக்காகவும் கொண்டுசெல்கின்றார்கள். ஆகையால் இவ்வாறான அபிவிருத்தி குழு தலைவரை எந்த பிரதேச செயலக மக்களும் ஏற்கொள்ள முடியாததொரு தீர்மானங்களையும் நாங்கள் எடுக்கவேண்டி இருக்கின்றது .

அணைத்து முஸ்லீம் பிரதேச செயலகத்தில் இருக்கக்கூடிய பிரதேச செயலாளர்கள் நிர்வாகம் செய்கின்றார்கள். ஆனால் தமிழ் பிரதேச செயலாளர் மாத்திரம் அரசியல் செய்கின்றார் என இவர் கூறிய விடயம் என்பது தமிழ் பிரதேச செயலாளர் அனைவரையும் தலைகுனிய செய்கின்றது.இவ்வாறானபேச்சுக்களை நீங்கள்பேசக்கூடாது. இதுஉண்மைக்கு புறம்பான கருத்து என நான் கூறியபோது என்னை இனவாதியாக சித்திரித்தார். இவர் மாத்திரம் என்னை இனவாதியாக சித்திரிக்கவில்லை. கடந்த அபிவிருத்துக்குழு கூட்டம் அரச அதிபர் தலைமையில் நடந்தபின்னர் அதாவுல்லாவும் என்னை இனவாதி என்று சொன்னார்.

இவர்கள் நாங்கள் தமிழர்கள் பாதிக்கப்படுகின்றபோது பிரதேச செயலகங்களுக்கு நிதி ஒதுக்கீடு செய்கின்றபோது இவ்வாறான காலகட்டத்தில் தமிழ் ஈழ விடுதலைப்புலிகள் கேட்டதை தான் இவர்கள் கேட்கின்றார்கள் அல்லது இவர்கள் இனவாதி என்று பலமுறை சித்திரித்திருக்கின்றார்கள். அதேபோன்று காரைதீவு ஒருங்கிணைப்பு குழு கூட்டத்தில் கல்முனை பிரதேச செயலகம் தொடர்பாக பேசியதற்கு காரணம்என்ன? பின்னணிஅரசியலில் அதிகார பறிப்பிற்கு காரணமாக இருப்பதில் இவரும் ஒருவர் என்பதை தான் தெளிவாக கூறுவதாக அவர் தெரிவித்திருந்தார்.

மேலும் நல்லிணக்கம் என்று நாடாளுமன்ற உறுப்பினர் முஷாரப் குறிப்பிட்டாலும் இவ்வாறான அபிவிருத்திக்குழு தலைவர்கள்தான் இங்கிருக்கின்ற நல்லிணக்கத்தையும் குழப்பிக்கொண்டிருக்கின்றார்கள். ஆகையால்இவ்வாறானஅபிவிருத்திகுழு தலைவர்களை நாங்கள் புறக்கணித்து பொதுவானசிந்தனையோடுபொதுவாக ஒதுக்கக்கூடிய அபிவிவிருத்திக்குழு தலைவர்தான் எங்களுடைய தமிழ் பிரதேச செயலகங்களுக்கு தேவை என்ற கருத்தினையும் இதன்போது ஜெயசிறில் தெரிவித்திருந்தார்.(05)

காலைக்கதிர் Kalaikkathir

# 720 பெண்கள் உட்பட 733 பேர் போதை பொருளுடன் கைது

நாடளாவிய ரீதியிலமேற்கொள்ளப்பட்ட விசேட சுற்றிவளைப்பின்போது நச்சுத்தன்மைமிக்க போதைப்பொருள்களுடன் 720 பெண்களும் 13 ஆண்களும் கைது செய்யப்பட்டுள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்களில் 19 பேர் மேலதிக விசாரணைகளுக்காக பொலிஸ் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளனர்.

போதைப்பொருள்களுக்கு அடிமையாகவுள்ள 11 பேர் புனர்வாழ்வு நிலையங்களுக்கு அனுப்பி வைக்கநடவடிக்கைஎடுக்கப்பட்டுள்ளதாகபொலிஸார் தெரிவித்தனர்.

இதன்போது சந்தேக நபர்களிடமிருந்து 152 கிராம் ஹெரோயின்,1133 கிராம் ஐஸ்,379 கிராம் கஞ்சா,16 கிராம் ஹெரோயின் மற்றும் 389 கிராம் கஞ்சா உள்ளிட்ட போதைப்பொருள்கள் கைப்பற்றப்பட்டுள்ளன.

(05)

# அக்குறணையைச் சேர்ந்த மியாத் என்ற இளைஞனைக் காணவில்லை



(எம்.எஸ்.எம்.ஸாகிர்)

அக்குறணையைச் சேர்ந்த 24 வயதுடைய முஹம்மத்மியாத்என்பவர்கடந்தசிலமாதங்களுக்கு முன் காணாமல் போயுள்ளார்.

கடந்த ஆண்டு செப்ரெம்பர் மாதம் 24 ஆம் திகதி தொழில் ஒன்றைத் தேடி கொழும்பு சென்ற இவர், தற்போது எங்கிருக்கின்றார் என்பது பற்றி இதுவரை தெரியாதுள்ளதாக குடும்பத்தவர்கள் தெரிவிக்கின்றனர்.

கடைசியாக இவர் கொழும்பில் இருந்து 011 2121087 என்ற இலக்கத்தில் தனது வீட்டுக்குப் பேசியுள்ளார்.

கொழும்பிலிருந்து இன்னும் ஒரு மாதத்தில் வீட்டுக்கு வருவதாக அவர் தெரிவித்துள்ளார். ஆனால்,அவர்தொடர்பாகஎந்தத்தகவலும்இதுவரை கிடைக்கவில்லை. இவர் பற்றி யாராவது தகவல் தெரிந்தால் 0777312421 என்ற தொலைபேசி இலக்கமான ஹல்மி அஹமத்துடன் தொடர்பு கொண்டு அறிவிக்குமாறு குடும்பத்தவர்கள்

# ரயிலிலிருந்து தவறி வீழ்ந்து வெளிநாட்டுப் பெண் காயம்!

## ஓஹியவில் சம்பவம்

மலையக ரயில் பாதையில் கொழும்பிலிருந்து பதுளை நோக்கி பயணித்த ரயிலில் இருந்து தவறி வீழ்ந்து வெளிநாட்டுப் பெண் ஒருவர் காயமடைந்துள்ளார்.

இந்த சம்பவம் கடந்த 21 ஆம் திகதி இடம்பெற்றுள்ளது.

காயமடைந்தவர் மொரிஷியஸ்நாட்டைச் சேர்ந்த 32 வயது பெண்ணாவார்.

இவர் பட்டிப்பொல மற்றும் ஓஹிய ஆகிய பகுதிகளுக்கு இடையில் ரயிலில் இருந்து தவறி வீழ்ந்து காயமடைந்துள்ள நிலையில், அம்புலன்ஸ் மூலம் தியத்தலாவை வைத்தியசாலைக்கு அழைத்துச் செல்லப்பட்டுள்ளார்.

இந்த சம்பவம் தொடர்பில் ஹப்புத்தளை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

(05)

# மோட்டார் வாகன திணைக்களத்தின் போலி ஆவணங்களுடன் இருவர் கைது



பதுளையில் மோட்டார் வாகன திணைக்களத்தின் போலி முத்திரைகள், சாரதி, போலியான ஸ்டிக்கர்கள் மற்றும் போலி ஆவணங்களுடன் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர் .

செவ்வாய்க்கிழமை இவர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளதுடன்கைதானவர்கள் 43 மற்றும் 22 வயதுடையவர்கள் என குற்றப் புலனாய்வுப் பிரிவு தெரிவித்தது.

கைதுசெய்யப்பட்ட சந்தேக நபர்கள் அகரபத்தனை மற்றும் படலுஓயா பிரதேசங்களில் வசிப்பவர்கள் எனவும், அவர்களின் தேசிய அடையாள அட்டையில் நான்கு பிரதேசங்களின் முகவரிகள் குறிப்பிடப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கைதான இருவரும் வீடொன்றை வாடகைக்கு எடுத்து, அங்கிருந்து இந்த போலி முத்திரைகள் மற்றும் போலி ஆவணங்களைப் பயன்படுத்தி போலியான ஆவணங்களை வழங்கியுள்ளமை விசாரணையில் தெரிய வந்துள்ளது.(05)

# சித்திரைக் கலை விழா திருகோணமலையில்



(ஹஸ்பர் ஏ.எச் )

திருகோணமலை மாவட்ட தமிழ் அமுதம் கலைவட்டத்தின் சித்திரைக் கலை விழா திருகோணமலை நகர சபை மண்டபத்தில் இடம்பெற்றது.

தமிழ் அமுதம் கலைவட்டத்தின் தலைவரும் அதிபருமான திருமதி சுஜந்தினி யுவராஜா தலைமையில் இடம்பெற்ற சித்திரைக் கலை விழாவுக்கு கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் உதவிச் செயலாளர் திருமதித.வருணிமற்றும்தம்பலகாமம் பிரதேசசெயலாளர் திருமதி ஜெ.ஶ்ரீபதி ஆகியோர்பிரதமவிருந்தினராககலந்து கொண்டு சிறப்பித்தனர்.



ஊடகவியலாளரும் எழுத்தாளருமான திருமதி ஜெ.நித்தியானந்தன், ஓய்வுநிலைஅதிபர்களானக.ஜெயநாதன், ப.மதிபாலசிங்கம், ந.நவரெத்தினராஜா, கெ.சித்திரவேலாயுதம் ஆகியோர் கௌரவ விருந்தினர்களாகவும், கிராம சேவையாளர், கலாசார உத்தியோகத்தர்கள், எழுத்தாளர்கள் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்து கொண்டு சிறப்பித்தனர். கவிஞர் .அம்.கௌரிதாசன் அவர்கள்தலைமையில் கவியரங்கும், கவிஞர். க. யோகானந்தன் தலைமையில் விவாத அரங்கும் , சிலம்பம், அகரம் மக்கள் கலைக் கூடம் மாணவர்களின் புல்லாங்குழல் இசையும், பேச்சு,கவிதை, திருக்குறள்,பாடல்கள் ,பிரகதீஸ்வரா நடன கலாலயா மாணவர்களின் நடனமும், சிவபாத நடனாலயா மாணவர்களின் நடனம் உட்பட பல கலை நிகழ்வுகள் இடம் பெற்றமை குறிப்பிடத்தக்கது.(05)

# மாணவர்களுக்கான சித்திரபாட கருத்தரங்கு



(எம்.எச்.எம்.சியாஜ்)

கற்பிட்டி கோட்டத்தில் உள்ள பாடசாலைகளான நாயக்கர்சேனை, தேத்தாப்பளை, நாவற்காடு, மாம்புரி மற்றும் நரக்களி ஆகிய பாடசாலை மாணவர்களுக்கான சித்திரப்பாட கருத்தரங்கு அண்மையில் நரக்களி பாடசாலையின் பிரதான மண்டபத்தில் இடம்பெற்றது.

புத்தளம் கல்வி வலயத்தின் சித்திரப்பாடத்துக்கான ஆசிரிய ஆலோசகரும் நாடறிந்த ஓவியருமான எம்.எம்.முஹம்மது இக்கருத்தரங்கில் பிரதான வளவாளராக கலந்து கொண்டார்.

கிராமப்புற பாடசாலைகளின் மாணவர்களுக்கு இவ்வாறான கருத்தரங்கை ஏற்பாடு செய்தமை தமக்கு மேலும் உற்சாகத்தை அளித்துள்ளதாகவும் இதனை ஏற்பாடு செய்த புத்தளம் வடக்கு கோட்டத்துக்கான பிரதி கல்வி பணிப்பாளர் அஸ்காவிற்கு மாம்புரி ரோமன் கத்தோலிக்க சிங்கள தமிழ் மகா வித்தியாலய பிரதி அதிபர் மெரிய லாவுஸ் மேர்ஸி தமது வாழ்த்துக்களையும் நன்றிகளையும் தெரிவித்துள்ளார்.
(05)

# இளநீர் ஒன்றின் விலை 220 ரூபாவாக அதிகரிப்பு

நாட்டில் தற்போது நிலவும் கடும் வெப்பநிலை காரணமாக இளநீர் ஒன்றின் விலை 220 ரூபாவாக அதிகரித்துள்ளது.

தம்புள்ளை பொருளாதார மத்திய நிலையத்தில் இளநீர் ஒன்றின் விலை 100 ரூபா முதல் 140 ரூபா வரையான விலையில் விற்பனை செய்யப்பட்டு வருகின்றது.

சில இடங்களில் இளநீர் 250 ரூபாவுக்கும் அதிக விலையில் விற்பனை செய்யப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.(05)




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 25.04.2024இல் வெளியிடப்பெற்றது